
# திருக்கோயில்



டிசம்பர்
1998

விலை
ரூபாய் ஐந்து



திருவருணை அருள்மிகு அருணாசலேசுவரர்



# திருக்கோயில்



திங்கள் இதழ்


தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை 40 | திருவள்ளுவர் ஆண்டு 2029 வெகுதானிய ஆண்டு மார்கழி டிசம்பர் 1998 | மணி 12 |
|---|---|---|



சிறப்பாசிரியர்

சுகவனேஸ்வர், இ.ஆ.ப.,

ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பி.எச்.டி.,

திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.,

கூடுதல் ஆணையாளர்

திரு த. சுந்தரம், பி.ஏ., பி.எல்.,

இணை ஆணையாளர், தலைமை இடம்

திரு மு. இராமச்சந்திரன், பி.ஏ.,

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்.,

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


முகப்பு

திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி

## பொருளடக்கம்


வைகுண்ட ஏகாதசி

- டாக்டர் த. அமிர்தலிங்கம்

சிவபெருமான் 108 போற்றி

திருவண்ணாமலை தல விளக்கம்

- ஆலய வெளியீடு

கங்கையாடலும் கார்த்திகைத் தீபமும்

- டாக்டர் சிவப்பிரியா

கம்பனும் திருமுறைகளும் - ஒன்பதாம் திருமுறை

- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

திருவண்டப்பகுதியும் இன்றைய விஞ்ஞானமும்

- மு.பெ. சத்தியவேல் முருகன், பி.இ.

திருஞானசம்பந்தரும் அருணகிரிநாதரும்

- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

சிவப்பிரகாசர் கவிதைநயம்

- நடராசன் அடிமை

தண்டிப்பதும் கருணையே

- டாக்டர் பழ. முத்தப்பன்

வினாவும் விடையும்

- சித்தாந்த வித்தகர் ஆறுமுகம்

வாசகர் எண்ணங்கள்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# வைகுண்ட ஏகாதசி

— டாகடர் த. அமிர்தலிங்கம்

**''கண்ணன் கழலிணை நண்ணும் மனம் உடையீர்
என்னும் திருநாமம் தின்னம் நாரணமே''**

— நம்மாழ்வார்

கிருதயுகத்தில் முரன் என்ற அசுரன், தேவர்களையும் முனிவர்களையும் கொடுமைப்படுத்தி வந்தான். அம்முரனை வதைத்தருள வேண்டுமென்று தேவேந்திரன், தன் தேவகணங்களோடு கயிலாயம் சென்று சிவபெருமானிடம் முறையிட்டான். சிவபெருமான் அவர்களைத் திருமாலிடம் சென்று முறையிடுமாறு பணித்தார்.

இந்திரனும், தேவர்களும், முனிவர்களும் பாற்கடல் சென்று பரந்தாமனைப் பணிந்து முறையிட்டனர்.

திருமாலும் தேவர்களின் குறைமுடித்தருளும் பொருட்டு முரனுடன் போர்புரிந்தார். பல ஆண்டுக் காலம் முரனுடன் போர்புரிந்தும், முரனை அவரால் வெல்ல முடியவில்லை. களைப்படைந்த திருமால் பத்திரிகாசிரமம் சென்று சிம்ஹாஹி குகையில் பள்ளி கொண்டார்.

திருமாலைப் பின்தொடர்ந்து வந்த முரன், உறக்கத்தில் இருந்த திருமாலைக் கொல்ல இதுவே நல்ல தருணம் என நினைத்துத் தன் உடைவாளை உருவினான்.

அச்சமயம் திருமாலின் உடலில் இருந்து ஒரு கன்னிகை வெளிப்பட்டு, முரனுடன் போர்புரிந்து, தன் ஹுங்காரத்தால் முரனைப் பிடிசாம்பலாக எரித்துவிட்டாள்.

திருமாலும் துயில் நீங்கி தம் உடலிலிருந்து வெளிப்போந்து முரனை வதைத்தழித்த சக்தியைப் பாராட்டினார். அவளுக்கு ஏகாதசி என்று பெயரிட்டார்.

இந்த ஏகாதசி கன்னிகை தோன்றியது மார்கழி மாத கிருஷ்ணபட்ச ஏகாதசி திதியில் ஆகும். ஆகவே இந்த ஏகாதசி உற்பத்தி ஏகாதசி எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

மார்கழி மாதத்தில் சுக்கிலபட்சத்தில் (வளர்பிறையில்) வரும் ஏகாதசி திதியே மோட்ச ஏகாதசி எனவும், பெரிய ஏகாதசி எனவும், வைகுண்ட ஏகாதசி எனவும் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆண்டுதோறும் 24 ஏகாதசி திதிகள் வருகின்றன. முரனை வதைத்தழித்த ஏகாதசி கன்னிகையைப் போற்றியும், பரந்தாமனைப் போற்றியும் இந்த 24 ஏகாதசிகளிலும் விரதமிருந்து திருமாலை வழிபடும் அடியார் எவராயினும் அவர்கள் இகபர சுகங்கள் எல்லாமும் பெற்று வைகுந்தப் பதம் பெற்று உய்வது திண்ணமாகும்.

ஓராண்டில் வரும் இருபத்தி நான்கு ஏகாதசிகளும் அவற்றின் பெயர் விவரமும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | உற்பத்தி ஏகாதசி: | இது மார்கழிமாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது. |
| 2. | மோட்ச ஏகாதசி: (வைகுண்ட ஏகாதசி) | இது மார்கழி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது. |
| 3. | ஸபலா ஏகாதசி: | இது தை மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது. |
| 4. | புத்ரதா ஏகாதசி: | இது தை மாதம் சுக்கில பட்சத்தில் வருவது. |
| 5. | ஷட்திலா ஏகாதசி: | இது மாசி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது. |
| 6. | ஜயா ஏகாதசி: | இது மாசி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது. |
| 7. | விஜயா ஏகாதசி: | இது பங்குனி மாதம் கிருஷ்ணபட்சத்தில் வருவது. |
| 8. | ஆமலதீ ஏகாதசி: | இது பங்குனி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது. |
| 9. | பாபமோசனிகா ஏகாதசி: | இது சித்திரை மாதம் கிருஷ்ணபட்சத்தில் வருவது |
| 10. | காமதா ஏகாதசி: | சித்திரை மாதம் சுக்கில பட்சத்தில் வருவது. |
| 11. | வரூதிநீ ஏகாதசி: | வைகாசி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது. |
| 12. | மோகினி ஏகாதசி: | வைகாசி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது. |

13. அபரா ஏகாதசி: ஆனி மாதம் கிருஷ்ணபட்சத்தில் வருவது.

14. நிர்ஜலா ஏகாதசி: ஆனிமாதம் சுக்கிலபட்சத்தில் வருவது.

15. யோகிநீ ஏகாதசி: ஆடிமாதம் கிருஷண்பட்சத்தில் வருவது.

16. சயிநீ ஏகாதசி: ஆடி மாதம் சுக்கிலபட்சத்தில் வருவது.

17. காமிதா ஏகாதசி: ஆவணி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.

18. புத்ரஜா ஏகாதசி: இது ஆவணி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது.

19. அஜா ஏகாதசி: புரட்டாசி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.

20. பத்மநாபா : ஏகாதசி இது புரட்டாசி மாதம் சுக்கிலபட்சத்தில் வருவது.

21. இந்திரா ஏகாதசி: இது ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சத்தில் வருவது.

22. பாபாங்குசா: ஏகாதசி இது ஐப்பசிமாதம் சுக்கில பட்சத்தில் வருவது.

23. ரமா ஏகாதசி: இது கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்சத்தில் வருவது.

24. பிரபோதினி: ஏகாதசி இது கார்த்திகை மாதம் சுக்கிலபட்சத்தில் வருவது.

இவ்வாறு ஆண்டுக்கு 24 ஏகாதசிகள் நிச்சயம் வரும். சில வருடங்களில் அதிகப்படியாக ஓர் ஏகாதசி வரும். அந்த 25ஆவது ஏகாதசிக்கு கமலா ஏகாதசி என்று பெயர்.

இந்த ஏகாதசிகளில் விரதமிருந்து பயன் பெற்றோர் வரலாறுகள் ஏராளமாக உள்ளன.

இந்த ஏகாதசிகளின் பெயர்களை நினைவில் கொள்வது சிரமமாக இருப்பினும், மாதந்தோறும் ஏகாதசி விரதம் அனுட்டித்தல் மிகுந்த பலன்களை வழங்கும் என்பதை நினைவில் கொண்டு ஏகாதசி விரதம் இருத்தல் வேண்டும்.

சிவபெருமானும் பார்வதி தேவியிடம் ''விரதங்களில் சிறந்தது ஏகாதசி விரதமே. ஏகாதசி விரதம் இருப்பதன் மூலம் சகல பாவங்களையும் போக்கிக் கொள்வதோடு, அசுவமேத யாகம் செய்யும் பலன்களுக்கு நிகரான பலன்களைப் பெறமுடியும்'' என்று தெரிவித்துள்ளார்.

ஏகாதசி விரதம் இருப்பவர்கள் அதற்கு முன் தினமாகிய தசமி அன்று ஒருவேளை உணவுண்டு, மறுநாள் ஏகாதசி அன்று நாள் முழுவதும் உண்ணாமல் உபவாசம் இருத்தல் வேண்டும். அதற்கு அடுத்த நாளாகிய துவாதசி அன்று விடியற்காலையில் நீராடித் திருமண் தரித்து துளசிதீர்த்தம் அருந்தி, சூரிய உதயத்திற்கு முன்பே பாரணை செய்ய வேண்டும். பாரணையில் நல்ல காய், கறிகளுடன் கூடிய உணவு வகைகள் சமைத்து இறைவனை வணங்கி உண்ண வேண்டும். அன்றைய உணவில் அகத்திக்கீரை, நெல்லிக்காய், சுண்டைக்காய் இவைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அன்று சூரிய உதயத்திற்குள் பாரணையை முடித்துவிட்டு அன்று முழுவதும் உறங்காமலும், இரவு ஏதும் உண்ணாமலும் விரதம் நிறைவு செய்ய வேண்டும்.

ஏகாதசி அன்று துளசிதளம் பறிக்கக் கூடாது ஆகையால், தசமி அன்றே துளசிதளம் பறித்துப் பூசைக்கும் வைத்துக் கொள்ள வேண்டும்.

மாதம் இருமுறை ஏகாதசி விரதம் இருப்பவர்கள் சகல சௌபாக்கியங்களையும் அடைவர். இவ்வாறு ஆண்டு முழுவதும் ஏகாதசி விரதம் இருக்க இயலாதவர்கள் ஆனிமாதம் சுக்கிலபட்சத்தில் ஏகாதசி விரதம் இருந்தாலும் அல்லது கார்த்திகை மாதம் சுக்கிலபட்சத்தில் ஏகாதசி விரதம் இருந்தாலும் ஆண்டு முழுவதும் ஏகாதசி விரதத்தைக் கடைப்பிடித்த பலன்களைப் பெறுவர் என்று ஆன்றோர்கள் உணர்த்தியுள்ளனர்.

ஒருமுறை வேதவியாசர் தருமரிடம் ஏகாதசி விரதம் இருப்பதன் பெருமையைக் கூற, அருகில் இருந்த பீமன் ''என்னால் உணவில்லாமல் ஒரு வேளை கூட இருக்க முடியாது. எவ்வளவு அன்னம் உண்டாலும் என் வயிற்றுப் பசி அடங்குவதில்லை. அப்படியிருக்க நான் எப்படி ஏகாதசி விரதம் இருத்தல் இயலும்?'' என்று வினவினான்.

அப்பொழுது வேதவியாசர் ஆனிமாதம் சுக்கில பட்ச ஏகாதசியன்று விரதம் இருந்தால், ஆண்டு முழுவதும் உள்ள எல்லா ஏகாதசிகளிலும் விரதம் இருந்த பலன்களைப் பெற இயலும் என்று உணர்த்த பீமனும் ஆனிமாதம் சுக்கிலபட்ச ஏகாதசி விரதம் இருந்து அனைத்து ஏகாதசி பலன்களையும் பெற்றான் என்பது வரலாறு.

ஏகாதசி விரதத்தைத் தவறாமல் அனுட்டித்து விரதம் காக்கும் பொருட்டுத் தன் மகன் தர்மாங்கதனையும் பலியிட முன்வந்த புண்ணிய சீலன் ருக்மாங்கதன் வரலாறு அற்புத வரலாறு ஆகும்.

விதர்ப்ப தேசத்தை ஆண்டு வந்த ருக்மாங்கதன் தேவ கன்னிகைகள் மூலமாக ஏகாதசி விரதப்

பலனை அறிந்துகொண்டான். தான் மட்டும் ஏகாதசி விரதம் இருந்து மேன்மை அடைந்தால் போதாது எனக்கருதி தன் நாட்டு மக்கள் எல்லோரும் ஏகாதசி விரதம் தவறாமல் கடைப்பிடிக்கப் பறையடித்து அறிவுறுத்திய அருளாளன் ருக்மாங்கதன் ஆவான்.

பூவுலகில் எல்லோரும் ருக்மாங்கதன் ஆணைப்படி ஏகாதசி விரதம் அனுட்டிக்க, இறப்போர் அனைவரும் வைகுண்டத்திற்கே சென்றனர். நரகலோகம் வெறிச்சோடிப் போய்விட்டது.

எமதேவனின் முறையீட்டினைக் கேட்ட பிரமன், ருக்மாங்கதனின் ஏகாதசி விரதத்தைப் பங்கப் படுத்துவதற்கென்றே ஒரு அழகியைப் படைத்து மோகனாங்கி எனும் அப்பேரழகுப் பெட்டகத்தைப் பூவுலகிற்கு அனுப்பி வைத்தான்.

மோகனாங்கி, ருக்மாங்கதன் வேட்டைக்குச் செல்லும் வழியில் ஒருசோலையில் பொன்னூஞ்சலில் அமர்ந்து வீணை இசைத்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டு அவள் அழகில் மயங்கிய ருக்மாங்கதனும் அவளை மணந்து கொள்ள வேண்டினான்.

திருமணத்திற்கு இசைந்த மோகனாங்கியும் ''திருமால் மீது ஆணையாக நான் கோரும் வரத்தைக் கோரும் வேளையில் நீர் கொடுக்க சம்மதித்தால் திருமணம் செய்வேன்'' என்று தந்திரமாக ருக்மாங்கதனிடம் வரம் பெற்றுக் கொண்டு அவனைத் திருமணம் செய்துகொண்டாள்.

ருக்மாங்கத மன்னனின் ஏகாதசி விரதத்தைப் பங்கம் செய்ய நினைத்திருந்த மோகனாங்கி அதற்குரிய தருணத்தை எதிர்பார்த்திருந்தாள்.

அவள் எண்ணியிருந்தவாறே ஏகாதசியும் வந்தது. வள்ளுவன் ஏகாதசி விரதத்தை நினைவூட்டிப் பறையறியக் கேட்ட ருக்மாங்கதன் மோகனாங்கியின் கட்டிலிலிருந்து இறங்கி வாய்த்தாம்பூலத்தை உமிழ்ந்து ''ஓம் நமோ நாராயணா'' என நாராயண மந்திரத்தை உபதேசிக்கலானான்.

''என்னுடன் சரச வார்த்தைகள் பேசாமல் உதாசீனம் செய்து செல்வது நியாயம் அல்ல'' என்றாள் மோகனாங்கி.

''பெண்ணே! இன்றைய தினம் ஏகாதசி விரதம் தொடங்க வேண்டிய தசமி நாள். மேலும் கார்த்திகை மாதம் வரும் இந்த ஏகாதசி விரதம் மிகவும் சிறப்புடையது. ஆடிமாதம் முதல் ஐப்பசி மாதம் வரை உறக்கத்தில் உள்ள இறைவன் விழித்துக்கொள்ள வரும் கார்த்திகை ஏகாதசியில் விரதம் இருப்பதனால் அனைத்து ஏகாதசி பலன்களையும் இவ்வொரு ஏகாதசியில் விரதம் இருப்பவர்களும் பெறஇயலும். ஆகவே என்னை விரதப்பங்கப்படுத்தாதே'' என்று ருக்மாங்கதன் மோகனாங்கியிடம் கேட்டுக் கொண்டான்.

அவன் வேண்டுகோளை ஏற்காத மோகனாங்கி, முன் அவன் செய்து தந்த சத்தியத்தை நினைவு படுத்தி ''நான் கேட்கும் வேளையில் கேட்கும் வரம் தருவதாக ஆணையிட்டுள்ளீர். ஆகவே அன்று எனக்கு அளித்த வரத்தின்படி இன்று நீர் என்னுடன் உல்லாசமாக இருப்பதே நான் வேண்டும் வரம். அதை நிறைவேற்றித் தாரும்'' என்று அடம்பிடித்தாள் மோகனாங்கி.

''பெண்ணே! என் உயிர் போவதாக இருப்பினும் ஏகாதசி விரதம் கைவிடேன். என் அரசு, என் மனைவிமார்கள், என் அருமை மகன் - ஆகிய எதைக் கேட்டாலும் தடையின்றிக் கொடுப்பேன்'' என்று உறுதி கூறினான் ருக்மாங்கதன்.

''அப்படியானால் உன் மகன் தர்மாங்கதனுடைய தலையை வெட்டி என்னிடம் தருக'' என்றாள் விரதபங்கம் விழைந்து வந்த மோகனாங்கி. திருமால் அருளால் பிறந்த உத்தமபுத்திரன் தர்மாங்கதனைப் பலிதரத் துணியாமல் ருக்மாங்கதன் ஏகாதசி விரதத்தைக் கைவிட்டு விடுவான் என்று கருதியே மோகனாங்கி இத்தகைய கொடிய வேண்டுகோளையும் மன்னனிடம் வைத்தாள்.

ஆனால் ஏகாதசி விரதத்திற்காகத் தன் மகன் தலையைத் தரவும் துணிந்துவிட்ட ருக்மாங்கதனின் பக்தித் துணிவை என்னவென்று வியப்பது! தந்தைக்காக தன் தலைதரத் துணிந்த மகனின் தியாகத் துணிவை என்னென்று போற்றுவது!

''திருமாலுக்கு மிகவும் பிரியமான ஏகாதசி விரதத்தைக் காத்துக் கொள்ள ஒருவன் தன் மகனைக் கொல்வதும் பாவம் ஆகாது! அதுவும் புண்ணியமே'' என்று துணிந்தான் மன்னன் ருக்மாங்கதன்.

''நானே முழுமனதுடன் இதற்குச் சம்மதிப்பதால் இதில் பாவம் சிறிதும் கிடையாது'' என்று தலைதர முன்வந்து குனிந்து நின்றான் மகன் தர்மாங்கதன்.

தாய் சந்தியாவளிதேவி மகன் தர்மாங்கதனுடைய இரு கைகளையும் இறுக்கமாகப் பற்றிக் கொள்ள, ருக்மாங்கதன் ''ஓம் நமோ நாராயணா'' என்ற எட்டெழுத்து மந்திரத்தை உச்சரித்தவாறு மகனின் தலையை வாளால் வெட்டினான். அந்த வாளே பூமாலையாக மாறித் தர்மாங்கதனின் கழுத்தை அலங்கரித்தது.

திருமாலும் அப்பொழுதே தம் மெய்யன்பர்களுக்குத் திருக்காட்சி அளித்து ''உயிரைவிட ஏகாதசி விரதமே மேல் என்று மெய்ப்பித்த உங்களை வைகுண்டம் அழைத்துச் செல்வோம்'' என்று கூறி புஷ்பகவிமானத்தில் ருக்மாங்கதனையும், சந்தியாவளி தேவியையும் தர்மாங்கதனையும் வைகுண்டம் கொண்டு சென்றார்.

ஏகாதசி விரத மகிமையை ருக்மாங்கதனுடைய திவ்விய சரித்திரம் இவ்வாறு நமக்குத் தெளிவுபடுத்துவதைப் போலவே, அம்பரீச மன்னனுடைய வரலாறும் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது.

ஓராண்டு முழுவதும் ஏகாதசி விரதத்தைச் சிறப்புற கடைப்பிடித்து வந்த மன்னன் அம்பரீசன். கார்த்திகை மாதத்தில் வந்த ஏகாதசி விரதத்தை அனுட்டிக்கும் பொருட்டு யமுனை நதிக்கரையில் மதுவனம் என்னும் இடத்தில் தங்கியிருந்தான்.

தசமி, ஏகாதசி நாட்களில் கடைப்பிடிக்க வேண்டிய விரதங்கள் அனுட்டித்த பின் மறுநாள் துவாதசி விடிகாலையில் பாரணை செய்து விரதத்தை முடிக்க இருந்தான் மன்னன் அம்பரீசன்.

அப்பொழுது துர்வாச முனிவர் அங்கு வர அவரை எதிர்கொண்டு அழைத்துப் பாதபூசை செய்து வரவேற்றுத் தன் அதிதியாக இருந்து தன்னைச் சிறப்பிக்கக் கேட்டுக் கொண்டான் அம்பரீசன்.

''நான் யமுனையில் நீராடி வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்ற துர்வாசர், அம்பரீசன் விரதத்தைப் பங்கப்படுத்த வேண்டுமென்று எண்ணி யமுனை ஆற்றில் ஒருவரும் அறியாதவாறு ஒளிந்து கொண்டுவிட்டார்.

சூரியன் உதயம் ஆவதற்குள் துவாதசி பாரணை முடிக்காவிடில் விரத பங்கம் ஏற்பட்டு விடும். சேவகர்களைக் கொண்டு துர்வாசரைத் தேடி வரக் கூறினான் அம்பரீசன். ஆனால் அவரை எங்கு தேடியும் காணவில்லை.

''என்ன செய்வது! பாரணை செய்யாவிடில் விரதபங்கம் நேரிடுமே'' என்று அம்பரீசன் மனம் கலங்கினார். ''சூரிய உதயம் ஆவதற்குள் திருத்துழாய்த் தீர்த்தத்தை அருந்திப் பாரணையை முடித்துக் கொள். அதிதியை விட்டுவிட்டு உணவு உண்பதுதான் தவறு; இதனால் குற்றமில்லை'' என்றனர் அருகிலிருந்த முனிவர்கள்.

அம்பரீசனும் வேறுவழியின்றி திருத்துழாய்த் தீர்த்தத்தை அருந்திப் பாரணையை முடித்துக் கொண்டார்.

அப்பொழுது தம் மறைவிடத்தை விட்டு வெளிப்போந்த துர்வாசர் தன் சடைகளில் ஒன்றைப் பிய்த்து அம்பரீசனை நோக்கி விட்டு எறிந்தார்.

அவர் சடையிலிருந்து ஒரு பயங்கரமான பூதம் தோன்றி அம்பரீசனைக் கொல்ல வந்தது.

பூதத்தைக் கண்ட அனைவரும் ஓடிவிட அம்பரீசன் மட்டும் ''ஓம் நமோ நாராயணா'' என அரிமந்திரத்தைச் செபித்தவாறே மனம் கலங்காமல் நின்று கொண்டிருந்தார்.

பூதம் அம்பரீசனைக் கொல்ல நெருங்கிய போது திருமால் தம் சுதர்சனச் சக்கரத்தை ஏவினார். அது அந்தப் பூதத்தை நோக்கிப் பாய்ந்தது. பூதம் சாம்பலாயிற்று.

அத்துடன் நின்றுவிடாமல் சக்கரம் பூதத்தை ஏவிய துர்வாசரை நோக்கியும் சீறிச் சென்றது.

மேரு முதலிய பர்வதங்களின் குளங்களிலும் மகாசமுத்திரங்களின் அடியிலும், பாதாள உலகங்களிலும் சென்று துர்வாசர் ஒளிந்துகொள்ள முயன்றும் முடியவில்லை. சுதர்சனம் அவரை விரட்டோ விரட்டென்று விரட்டிச் சென்றது.

சிவபெருமானைத் தஞ்சமடைந்தும், வைகுண்டம் சென்று திருமாலைச் சரணடைந்தும் காப்பாற்றப்படாத துர்வாசர், அம்பரீசனிடமே வந்து ''காப்பாற்றியருளும்'' எனத் தஞ்சம் அடைந்தார். அம்பரீசன் சுதர்சனத்தைத் தோத்திரம் செய்து வேண்ட, சுதர்சனம் துர்வாசரை விட்டு வைகுந்தம் சென்றடைந்தது.

அம்பரீசனும் துர்வாசருடன் விருந்துசெய்து அவரை மகிழ்வித்து, ஏகாதசி விரதப் பலனால் பூவுலகில் சிறப்புற்று வாழ்ந்தார் என்பது புராணம் கூறும் வரலாறு ஆகும்.

''மாதங்களில் நான் மார்கழியாக விளங்குகிறேன்'' என்பது கண்ணன் உகந்தருளிய வாக்கு.

ஆகவே மார்கழியில் சுக்கிலபட்சத்தில் வரும் மோட்ச ஏகாதசி, விரதம் இருப்பார் யாவருக்கும் இம்மை, மறுமை நலங்களும் முத்திப்பேறும் நல்கு வதால் பெரிய ஏகாதசி எனச் சிறப்பிக்கப் படுகின்றது.

''நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற
அம்மனாய்''

என்ற திருப்பாவை பொன்மொழிக்கு இணங்க ஏகாதசி விரதம் இருந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வைகுந்தம் நாம் பெறுவோம் ஆக!

ஓம் நமோ நாராயணா!

★★★

# அருள்மிகு சிவபெருமான் 108 போற்றி

## அருள் வேண்டுதல் (சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய
இன்நன்னாளில் ....................
அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும், சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், உமது திருவருள் பெருகவும், மங்கலவாழ்வெய்தவும்

உம் திருவடிகளில் ........
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

## அருள்மிகு சிவபெருமான் 8 போற்றிகள்

**மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து தொகுத்தது**

1. ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி
2. ஓம் ஆலமர நீழலில் அமர்ந்தாய் போற்றி
3. ஓம் ஆலாலம் உகந்துண்ட ஆதீ போற்றி
4. ஓம் ஓங்காரத்து உட்பொருளாய் நின்றாய் போற்றி
5. ஓம் காலனைக் காய்ந்தஎம் கடவுள் போற்றி
6. ஓம் சிற்றம் பலம்மேய செல்வா போற்றி
7. ஓம் மூவாத் தமிழ்ச்சங்க முதல்வா போற்றி
8. ஓம் வேத விழுப்பொருளே போற்றி போற்றி

## அருள்மிகு சிவபெருமான் 16 போற்றிகள்

**மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து தொகுத்தது**

1. ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி
2. ஓம் ஆலமர நீழலில் அமர்ந்தாய் போற்றி
3. ஓம் ஆலாலம் உகந்துண்ட ஆதீ போற்றி
4. ஓம் ஏத்தாதார் மனத்து அகத்து இருளே போற்றி
5. ஓம் ஓங்காரத்து உட்பொருளாய் நின்றாய் போற்றி
6. ஓம் கங்கையைச் சடையில் கரந்தாய் போற்றி
7. ஓம் காலனைக் காய்ந்தஎம் கடவுள் போற்றி
8. ஓம் சிற்றம் பலம்மேய செல்வா போற்றி
9. ஓம் சுண்ணவெண் ணீறு துதைந்தாய் போற்றி
10. ஓம் செந்துவர் வாய்உமை பங்கா போற்றி
11. ஓம் செற்றவர் தம் புரம்எரித்த சிவனே போற்றி
12. ஓம் தென்னாடு உடைய சிவனே போற்றி
13. ஓம் மந்திரமும் மறைப்பொருளும் ஆனாய் போற்றி
14. ஓம் முன்னே தோன்றி முளைத்தாய் போற்றி
15. ஓம் மூவாத் தமிழ்ச்சங்க முதல்வா போற்றி
16. ஓம் வேத விழுப்பொருளே போற்றி போற்றி

## அருள்மிகு சிவபெருமான் 108 போற்றிகள்

**மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து தொகுத்தது**

1. ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி
2. ஓம் அடியவர்க் காரமுது ஆனாய் போற்றி
3. ஓம் அண்டத்துக்கு அப்பாலாய் நின்றாய் போற்றி
4. ஓம் அதிபதியே ஆர்ஆமுதே ஆதீ போற்றி
5. ஓம் அந்தியாய் நின்ற அரனே போற்றி
6. ஓம் அமரர் பதியாள வைத்தாய் போற்றி
7. ஓம் அருமையில் எளிய அழகே போற்றி
8. ஓம் அருந்தவர்கள் தொழுதுஏத்தும் அப்பா போற்றி
9. ஓம் அனல்அங்கை ஏந்திய ஆதீ போற்றி
10. ஓம் ஆசை தீரக் கொடுப்பாய் போற்றி
11. ஓம் ஆலமர நீழலில் அமர்ந்தாய் போற்றி
12. ஓம் ஆலாலம் உகந்துண்ட ஆதீ போற்றி
13. ஓம் ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
14. ஓம் இடர்கடி கணபதி வர அருளினை போற்றி
15. ஓம் இரவிடை ஒள்ளரி ஆடினாய் போற்றி
16. ஓம் ஈண்டுஒளி சேர்கங்கைச் சடையாய் போற்றி
17. ஓம் உடலின் வினைகள் அறுப்பாய் போற்றி
18. ஓம் உடலே உயிரே உணர்வே போற்றி
19. ஓம் உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
20. ஓம் உள்ஒளி வீசும் ஒருவ போற்றி
21. ஓம் ஊரும் அரவம் உடையாய் போற்றி
22. ஓம் ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
23. ஓம் ஊன்உடைப் பிறவியை ஒழிப்பாய் போற்றி
24. ஓம் எண்ணரிய திருநாமம் உடையாய் போற்றி
25. ஓம் எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
26. ஓம் எரிசுடராய் நின்ற இறைவா போற்றி

27. ஓம் எரியும் மழுவாள் படையாய் போற்றி
28. ஓம் எல்லாம் சிவன் என நின்றாய் போற்றி
29. ஓம் ஏத்தாதார் மனத்து அகத்து இருளே போற்றி
30. ஓம் ஏழ்உலகும் ஏழ்மலையும் ஆனாய் போற்றி
31. ஓம் ஓங்காரத்து உட்பொருளாய் நின்றாய் போற்றி
32. ஓம் ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
33. ஓம் ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
34. ஓம் கங்கையைச் சடையில் கரந்தாய் போற்றி
35. ஓம் கண்ணாய் உலகுஎலாம் காத்தாய் போற்றி
36. ஓம் கம்பமா கரிஉரித்த கபாலி போற்றி
37. ஓம் கலைமான் மறிஏந்தும் கையா போற்றி
38. ஓம் கழல்அடைந்தார் செல்லும் கதியே போற்றி
39. ஓம் கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
40. ஓம் கற்றுஅறிந்த கலைஞானம் ஆனாய் போற்றி
41. ஓம் காப்புஅரிய ஐம்புலனும் காத்தாய் போற்றி
42. ஓம் காலனைக் காய்ந்தஎம் கடவுள் போற்றி
43. ஓம் காவாய் கனகக் குன்றே போற்றி
44. ஓம் குழைக்கும் பயிர்க்குஓர் புயலே போற்றி
45. ஓம் குறைஉடை யார்குறை தீர்ப்பாய் போற்றி
46. ஓம் கொங்குஅலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
47. ஓம் சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி
48. ஓம் சிவலோக நெறிதந்த சிவனே போற்றி
49. ஓம் சிற்றம் பலம்மேய செல்வா போற்றி
50. ஓம் சுடர்ஒளியாய் விளங்கும் சோதி போற்றி
51. ஓம் சுண்ணவெண் ணீறு துதைந்தாய் போற்றி
52. ஓம் செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
53. ஓம் செந்துவர் வாய்உமை பங்கா போற்றி
54. ஓம் செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
55. ஓம் செல்வாய செல்வம் தருவாய் போற்றி
56. ஓம் செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி
57. ஓம் சேவின் மேல்வரு செல்வா போற்றி
58. ஓம் ஞாயிறாய் மதியமாய் நின்றாய் போற்றி
59. ஓம் தக்கன் செய் பெருவேள்வி தகர்த்தாய் போற்றி
60. ஓம் தன்ஒப்பு அறியாத் தழலாய் போற்றி
61. ஓம் தீராநோய் தீர்த்து அருள வல்லாய் போற்றி
62. ஓம் தூநீறு சேர்த்துஇலங்கும் தோளா போற்றி
63. ஓம் தென்னாடு உடைய சிவனே போற்றி
64. ஓம் நஞ்சுஒடுங்கும் கண்டத்து நாதா போற்றி
65. ஓம் நஞ்சே அமுதாய் நயந்தாய் போற்றி
66. ஓம் நான்மறையோடு ஆறுஅங்கம் ஆனாய் போற்றி
67. ஓம் நால்திசைக்கும் விளக்காய நாதா போற்றி
68. ஓம் நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி
69. ஓம் நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
70. ஓம் நோக்குஅரிய திருமேனி உடையாய் போற்றி
71. ஓம் பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
72. ஓம் பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி
73. ஓம் பண்துலங்கப் பாடல் பயின்றாய் போற்றி
74. ஓம் பலரும் பரவப் படுவாய் போற்றி
75. ஓம் பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
76. ஓம் பற்றி உலகை விடாதாய் போற்றி
77. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
78. ஓம் பாட்டுஅகத்து இசையாகி நின்றாய் போற்றி
79. ஓம் பாரோர் விண்ஏத்தப் படுவாய் போற்றி
80. ஓம் பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
81. ஓம் பிரமன்தன் சிரம்அரிந்த பெரியோய் போற்றி
82. ஓம் பிறவி அறுக்கும் பிரானே போற்றி
83. ஓம் பிறைஅணி செஞ்சடை பிஞ்ஞகா போற்றி
84. ஓம் புற்றுஅரவக் கச்சுஆர்த்த புனிதா போற்றி
85. ஓம் பூதநாதனே புண்ணியா போற்றி
86. ஓம் பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
87. ஓம் பெரியாய் சிறியாய் பிறையாய் போற்றி
88. ஓம் பேர்ஆ யிரம் உடைப்பெம்மான் போற்றி
89. ஓம் பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
90. ஓம் மந்திரமும் மறைப்பொருளும் ஆனாய் போற்றி
91. ஓம் மயில்ஊர்தி முருகவேள் தாதை போற்றி
92. ஓம் மருந்துஅமரர்க்கு அருள்புரிந்த மைந்தா போற்றி
93. ஓம் மறைஉடைய வேதம் விரித்தாய் போற்றி
94. ஓம் மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் போற்றி
95. ஓம் மன்னிய திருவின் மலையே போற்றி
96. ஓம் மிக்கோர் ஏத்தும் விளக்கே போற்றி
97. ஓம் முன்னே தோன்றி முளைத்தாய் போற்றி
98. ஓம் மூவாத் தமிழ்ச்சங்க முன்னவா போற்றி
99. ஓம் மூவா நான்மறை முதல்வா போற்றி
100. ஓம் மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
101. ஓம் மூவுலகும் தான்ஆய முதல்வா போற்றி
102. ஓம் மெய்சேரப் பால்வெண்நீறு ஆடீ போற்றி
103. ஓம் மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
104. ஓம் வண்ணம் ஆயிரம் உடையாய் போற்றி
105. ஓம் வானோர்க்கு அருளிய மருந்தே போற்றி
106. ஓம் வானோர் வணங்கப் படுவாய் போற்றி
107. ஓம் வெள்ளிக் குன்றன்ன விடையாய் போற்றி
108. ஓம் வேத விழுப்பொருளே போற்றிபோற்றி

★ ★ ★

June Issue

# திருவண்ணாமலைத் தலச்சிறப்பு

உண்ணாமுலை உமையொளொடும்
உடன் ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே

- திருஞான சம்பந்தர்

சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடைப்பட்ட நாட்டை நடுநாடு என வழங்கினர் முன்னோர். இந்நாடு இன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும்பகுதியையும், வடார்க்காடு மாவட்டத்தின் சிறுபகுதியையும் தன்னுடையதாகக் கொண்டதாகும். தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற நடுநாட்டுத் தலங்கள் இருபத்திரண்டனுள் திருவண்ணாமலை இருபத்திரண்டாவதாக எண்ணப் பெறும். இத்தலம் திருவண்ணாமலை மாவட்டத்தின் தலைநகராகும்.

விழுப்புரம் - காட்பாடி இருப்புப்பாதையில் திருவண்ணாமலை புகைவண்டி நிலையம் உள்ளது. புகைவண்டி நிலையத்திலிருந்து அண்ணாமலையார் திருக்கோயில் 1 கி.மீ தூரத்தில் உள்ளது.

திருவண்ணாமலை செல்ல பேருந்துகள் பல நகரங்களிலிருந்தும் உள்ளன.

திருவண்ணாமலை பெரிய யாத்திரைத் தலம். சிறப்புநிலை நகராட்சியின் நிர்வாகத்திலுள்ள பெரிய நகரம். கடைவீதிகள், தங்கும் விடுதிகள் முதலிய வசதிகளை உடையஊர்.

## 1. தலப்பெருமை:

சமய உலகில் புகழ்பெற்ற திருத்தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றாலும் சிறந்த இத்தலம் விராட புருடனுக்கு மணிபூரகமாகவும், பஞ்சபூதத் தலங்களில் தேயுத் தலமாகவும் விளங்குவது. முத்தித் தலங்கள் நான்கினுள் நினைக்க முத்தி தருவது. ஞானத் தபோத னர்கள் வாழ்ந்து வரும் பெருமையுடையது. இம் மலையையே எட்டா மலை என்ற பொருளில் அண்ணாமலை என வழங்குகிறோம். இம்மலைப் பெயரே ஊர்ப் பெயராகவும் விளங்கி வருகிறது. திருமாலும் பிரம்மாவும் தாமே பிரமம் என்று எண்ணிய தருக்கொழிந்து தம்மை வழிபட விரும்பிய போது இறைவன் சிவலிங்கத் திருவுருவில் வெளிப் பட்டருளிய சிறப்புடையது. மகா சிவராத்திரியில் இலிங்கோத்பவ காலத்தில் சைவ மெய்யன்பர்கள் பலரும் திருவண்ணாமலையை நினைத்து வழிபடுவர். சிவபெருமான் உமையம்மையாருக்கு இடப் பாகம் அளித்த சிறப்பும் இத்தலத்திற்குண்டு.

திருக்கார்த்திகைப் பெருவிழா இத்தலத்தின் தனிச்சிறப்பான திருவிழாவாகும். அண்ணாமலையாருக்கு அரோகரா என்று அண்ணாமலை இறைவனை நினைந்துவழிபடாதவர் இல்லை எனலாம்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய ஐந்து தேவாரத் திருப்பதிகங்களும் சுந்தரர், மணிவாசகர், அருணகிரிநாதர் முதலியோர் அருளிய தனிப் பாடல்கள், பதிகங்கள், திருப்புகழ்கள் முதலியனவும் இத்தலத்திற்குள்ளன.

சூரியன், சந்திரன், பிரதத்தராசன், அஷ்ட வசுக்கள், பிரமதேவன், திருமால், புளகாதிபன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது.

தமிழக மன்னர்கள் பலரும் செய்த திருப் பணிகளைப் பெற்றுப் புகழ்பெற்ற திருக்கோயிலாகத் திருவண்ணாமலை விளங்கிவருகிறது.

நாள்தோறும் வடஇந்திய தென்னிந்திய மக்கள் பலரும் யாத்திரையாக வந்து வழிபடும் சிறப்பை இத்தலம் பெற்றுப் பெருமை பெற விளங்குகிறது.

## 2. தலப்பெயர்கள்:

திருமாலுக்கும் பிரம்மாவிற்கும் அடிமுடி எட்டாத நிலையில் இறைவன் மலை உருவில் தோன்றியது ஆதலின் அண்ணாமலை எனப் பெறுகிறது. அண்ணல்மலை அண்ணாமலை என்றாயிற்று எனவும் கூறுவர். அழல் உருவாய் இறைவன் வெளிப்பட்ட மலை என்னும் பொருளில் அருணாசலம் சோணா சலம் என்ற பெயர்கள் வடமொழியில் வழங்குகின்றன. முத்திபுரி, தலேச்சுரம், சிவலோகம், சுத்த நகரம், கௌரி நகரம், சோணகிரி, சோணாத்திரி,

அருணகிரி, அருணாத்திரி, அருணை முதலிய பெயர்களும் இத்தலத்திற்குள்ளன.

### 3. கோயில் அமைப்பு :

தமிழகத்தில் விளங்கும் பெரிய திருக்கோயில்களில் ஒன்று திருவண்ணாமலை. 24 ஏக்கர் பரப்பில் ஆறு பிரகாரங்களுடனும் ஒன்பது ராஜகோபுரங்களுடனும் மலையடிவாரத்தில் கிழக்கு நோக்கி அழகுற அமைந்துள்ளது. சுவாமிக்கு இடது பாகத்தில் அம்பாள்கோயில் கிழக்கு நோக்கி விளங்குகிறது. ஐந்தாம் பிரகாரத்து வெளித்திருமதில் மிக்க அகலமும் உயரமும் உடையது. தெற்கு, வடக்கு மேற்கு வாயில்களில் இரண்டிரண்டு கோபுரங்களும், கிழ்புறம் சுவாமி சன்னதியில் மூன்று கோபுரங்களுமாக ஒன்பது இராஜகோபுரங்கள் உள்ளன.

கிழைக்கோபுரம் பெரியது. 11 நிலைகளுடன் 217 அடி உயரமும் உடையதாய் இருக்கிறது. இக்கோபுரம் தென்னிந்தியாவிலேயே மிக உயரமான கோபுரமாகும். தெற்கு கோபுரத்தை திருமஞ்சனக் கோபுரம் என்றும், மேற்குக் கோபுரத்தை பேய்க் கோபுரம் என்றும், வடக்குக் கோபுரத்தை அம்மணி அம்மாள் கோபுரம் என்றும் கூறுவர்.

கிழக்கு இராஜகோபுர வாயில் வழியாக உள்ளே சென்ற உடன் வலதுபக்கத்தில் ஆயிரங்கால் மண்டபம் உள்ளது. இங்கு பாதாளலிங்கேசர் கோயில் உள்ளது. ரமண முனிவர் பலகாலம் தங்கித் தவம் செய்த இடம். இடது பக்கம் கம்பத்து இளையனார் திருக்கோயில் உள்ளது. இங்குள்ள முருகன் அருணகிரிநாதர் பிரார்த்தனைக்கிரங்கிப் பிரபுட தேவமகாராயருக்குக் காட்சி கொடுத்தவராவார். இச்சன்னதியின் தென்புறமாக நான்கு புறங்களிலும் திருமாளிகைப் பத்தி உடையதாயச் சிவகங்கைத் தீர்த்தம் விளங்குகிறது. சிவகங்கைத் திருக்குளத்தின் வடமேற்கில் சர்வசித்தி வினாயகர் கோயில் உள்ளது. இங்கு விநாயகரை வழிபட்டுப் பெரிய நந்திகேசுரரைத் தரிசித்து இரண்டாம் கோபுர வாயிலை அடைவோம்.

இரண்டாம் கோபுரம் வல்லாள மகாராஜா கோபுரம் எனப்படும். அருணகிரிநாதர் இக்கோபுரத்தின் மீதேறித் தமது ஊனுடலை நீக்கிக் கொள்ளக் கீழே விழுந்தபோது அவரைக் காப்பாற்றி அருள் செய்த முருகப்பெருமான் கோபுரவாயிலில் விளங்குகிறார்.

முருகப்பெருமான் சந்நிதியில் அருணகிரிநாதர் திருவுருவம் உள்ளது. கோபுரத்தின் தென்பால் கல்யாண சுந்தரேசுரர் சந்நிதி உள்ளது.

கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் வலதுபுறம் சக்திவிலாச சபா மண்டபத்தைக் காணலாம். கோபுரத்தின் தென்பால் காலபைரவர் சந்நிதி உள்ளது. அருகில் பிரமதீர்த்தம் உள்ளது. அடுத்து விளங்கும் மூன்றாம் கோபுரம் கிளிக்கோபுரம் எனப்படும். அருணகிரிநாதர் கிளி வடிவத்தோடு பாரிசாத மலர் கொண்டுவந்தபோது உடலைக் காணாமல் கிளி உருவத்தோடு இருந்து கந்தரனூபூதி பாடிய கோபுரம் இது. கிளி உருவம் கோபுரத்தில் உள்ளது.

கிளிக்கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் மூன்றாம் பிரகாரத்தில் பதினாறுகால் மண்டபம் உள்ளது. இங்குதான் திருக்கார்த்திகை நாளில் பஞ்சமூர்த்திகள் மலையை நோக்கி நிற்க மலைமீது தீபமேற்றும் விழா நடைபெறும். பல்லாயிரக்கணக்கான மக்கள் சுவாமியையும் தீபத்தையும் ஒரே நேரத்தில் தரிசிக்கும் இடமிது. அடுத்த வாயிலில் கொடிமரம் பரணிதீபம் வைக்கும் தீபஸ்தம்பம் ஆகியன இருக்கின்றன. பிரகாரத்தை வலம் வரும் போது முதலில் சம்பந்த விநாகரைத் தரிசிக்கலாம். தெற்குப் பிரகாரத்தில் தலமரமான மகிழமரம் உள்ளது. அடுத்து திருக்கல்யாண மண்டபம் உள்ளது. மேற்கே அருணகிரியோகீஸ்வரர் சந்நிதியும் வடக்கே அம்பாள் சந்நிதியும் கோயில் செல்லும் வழியும் கிழக்கே காளத்திலிங்கேசுரர் சந்நிதியும், கோயில் நிர்வாக அலுவலகமும் கிழக்கே பழனியாண்டவர் ஏகாம்பரேசுரர் சந்நிதிகளும் உள்ளன. இப்பிரகாரத்தின் உள்மதில்களில் பல கல்வெட்டுக்களும், புடைப்புச் சிற்பங்களும் உள்ளன. குன்றக்குடி ஆதின ஆதிகுரு முதல்வர் வரலாற்றுப் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

நான்காவது வாயிலைக் கடந்து அதிகார நந்திகேசுவரரை வழிபட்டு உள்ளே சென்றால் இரண்டாம் பிரகாரம் வரும். இப்பிரகாரத்தில் சிவாலயத்தில் அமைய வேண்டிய அனைத்துப் பரிவார தெய்வங்களின் சந்நிதிகளும் உள்ளன. தெற்கே அறுபத்து மூவர் திருவுருவங்கள் உள்ளன. மேற்கே சோமாஸ்கந்தர், வேணுகோபாலர், ஆறுமுகர், கஜலட்சுமி சந்நிதிகள் உள்ளனர். வடக்குப் பிரகாரத்தில் அறுபத்து மூவரின் உற்சவர் உள்ளனர். திருப்பள்ளியறை, நடராசர் சந்நிதியுள்ளன.

இவர்களை வழிபட்டு அண்ணாமலையார் சந்நிதிக்கு வருகிறோம். அர்த்தமண்டபம் அழகிய சலவைக்கல் திருப்பணியோடு தூய்மையாக உள்ளது. அருணாசலேசுவரர் அருளே திருமேனியாகச் சிவலிங்க வடிவில் காட்சி தருகிறார். நம்மை நாம் மறந்து அவரருளில் கலந்து வழிபடலாம்.

வழிபட்டு வெளியே வந்து முதற்பிரகாரமாகிய மேடையை வலம்வரும்போது கோஷ்டங்

களில் தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே இலிங் கோத்பவர், வடக்கே பிரம துர்க்கை, சண்டேசுவரை வழி படலாம்.

இரண்டாம் பிரகாரத்தின் வைகுந்த வாயிலின் வழியாக நவக்கிரக மூர்த்திகளை வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடையலாம்.

அம்பாள் சந்நிதியில் உள்ள மகாமண்டபத் தூண்களில் அஷ்டலஷ்மிகள், ருத்ரதுர்க்கை முதலிய சிற்பங்கள் விளங்கும் மகாமண்டபம் காட்சி தருகிறது. கர்ப்பகிருகத்தைச் சுற்றிய பிரகாரத்தில் திருவெம் பாவைப் பாடல்கள், தலத்திருப்பதிகங்கள் ஆகிய கல்வெட்டுகள் விளங்குகின்றன.

கருவறையின் முன்னுள்ள அர்த்தமண்டபம் அழகிய சலவைக்கல் திருப்பணியோடு காட்சி தருகிறது. அருள்மிகு உண்ணாமலையம்மை சின்னஞ் சிறிய திருவுருவுடன் அருட்காட்சி வழங்கி நம் உள்ளத்தில் இடம்பெறுதலைத் தரிசித்து உணரலாம்.

### 4. மூர்த்திகள் :

இத்தலத்தில் விளங்கும் தலவிநாயகருக்கு ஸ்ரீ சம்பந்த விநாயகர் என்றுபெயர். இவர் செந்தூரம் அணிந்த திருமேனியோடு காட்சி தருகிறார். கய முகாசுரனைக் கொன்று அவனது குருதியைத் தம் முடலில் இவர் பூசிக்கொண்டதாக வரலாறு. சுவாமி பெயர் ஸ்ரீ அருணாசலேசுரர் என்பதாகும். அண்ணா மலையார் உடையார் எனவும், திருவண்ணாமலை ஆண்டார், மகாதேவர், ஆள்வார், அண்ணாநாட்டுடை யார் எனவும் தல புராணங்களிலும் கல்வெட்டுகளி லும் கூறப்படுகின்றன. அம்பாள் பெயர் ஸ்ரீ அபீத குசாம்பாள், உண்ணாமுலையம்மை, உண்ணாமுலை நாச்சியார், திருக்காமக்கோட்டமுடைய நம்பிராட் டியார், உலகுடைய பெருமாள் நம்பிராட்டியார் என்பன தேவார இலக்கியங்கள் கல்வெட்டுகளில் காணப் பெறும் பெயர்களாகும்.

இத்தலத்து முருகப்பெருமான் சிறப்புடைய மூர்த்தி ஆவார். தீர்த்தம் - பிரமதீர்த்தம், சிவகங்கை தீர்த்தம், சோனைநதியாகியனவாகும். தலமரம் - மகிழ மரம் (வகுளம்).

## புராண வரலாறுகள்

### 5. அடிமுடி தேடிய வரலாறு :

படைத்தற் கடவுளாகிய நான்முகனும், காத்தற் கடவுளாகிய திருமாலும் தமக்குள் யார் பெரியவர் என்பதில் போட்டியிட்டனர். சிவபிரான் அவர் களிடையே ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாய்த் தோன்றி தமது அடியையோ முடி யையோ காணுகிறவர் யாரோ அவரே பெரியவர் எனக் கூறி ஓங்கி உயர்ந்து நின்றார். அவரது திரு வடிகள் பாதாளம் ஏழினுக்கும் கீழே சென்றது. திருமுடி அண்ட முகடுகளைப் பிளந்து உயர்ந்து சென்றது. திருமால் வராக அவதாரம் எடுத்துத் திரு வடிகளைக் காணச்சென்றார். நான்முகன் அன்னமா வடிவெடுத்துப் பறந்து சென்று திருமுடியைக் காணச் சென்றார். முடிவில் இருவரும் அடியையோ முடி யையோ காண இயலாது தமது அகங்காரம் அழியப் பெற்றவராய்ச் சிவபரம்பொருளே உலகில் முழு முதற் பரம்பொருள் என்பதனை உணர்ந்து தம்பிழை பொறுத்தருளுமாறு அப்பெருமானைப் பிரார்த் தித்தனர். பெருமாள் சிவலிங்கத் திருவுருவத்தோடு அச்சோதிப் பிழம்பினின்று வெளிப்பட்டார். திருமால் பிரமர் இருவரும் அப்பெருமானை வழிபட்டு உண்மை ஞானம் பெற்றனர். சோதிப்பிழம்பு அருணாசல மாயிற்று. அதினின்று தோன்றிய சிவ லிங்கம் அருணா சலேசுவரானார். இவ்வரலாற்றை இம்முறையில் கூறும் வெண்பா அறிதற்குரியது.

**ஆதி நெடுமால் அயன்காண அன்றுபரஞ்**
**சோதிப் செழுமஞ்சுடராய்த் தோன்றுமலை - வேதம்**
**முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி**
**வழங்குமலை அண்ணா மலை**

என்பதாகும்.

இவ்வரலாறு திருமுறைகளில் பல இடங் களிலும் பயின்று வருதலைக் காணலாம். திருஞான சம்பந்தர்தாம் அருளிய தேவாரத் திருப்பதிகந்தோறும் ஒன்பதாவது திருப்பாடலில் இவ்வரலாற்றைக் குறித்துத் திருப்பாடல்களை அருளியுள்ளார். இத்தலத் தேவாரத் திருப்பதிகங்களில்

**விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்**
**கிளர்தாமரை மலர்மேலுறை கேடில் புகழோனும்**
**அளவா வணம் அழலாகிய அண்ணாமலை அண்ணல்**
**தளராமுலை முறுவல் உமைதலை வன்அடி சரனே.**

எனவும்.

''தேடிக்காணோர் திருமால் பிரமர் தேவர் பெருமானை'' எனவும் குறித்தருள்கிறார். திருநாவுக் கரசர் இலிங்கப்புராணத் திருக்குறுந்தொகையில் பாடல்கள்தோறும் இவ்வரலாற்றை விரித்தருள் கின்றார். சுந்தரர் இத்தலத்திற்கு எழுந்தருளித் திருப் பதிகம் அருளிச் செய்து அடிமுடி தேடிய இத்தல வரலாற்றை

மாவாய் பிளந்தானும் மலர்மா மிசையானும்
ஆவாஅவர் தேடித் திரிந்தே அலமந்தார்

எனவும்

பண்டைய மால்பிரமன் பறந்தும் இடந்தும் அயர்ந்தும்
கண்டிலராய் அவர்கள் கழல் காண்பரிதாய பிரான்

எனவும், பிறவாறும் குறித்தலைக் காணலாம்.

திருவண்ணாமலை கிருதாயுகத்தில் அக்னி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் மாறின எனப் புராணம் கூறும். நிலநூல் இம்மலை நெருப்பினால் தோன்றியது என்று குறிப்பிடுகிறது.

## 6. தேவி இடப்பாகம் பெற்றது :

திருக்கயிலைமால்வரையில் சிவ பரம்பொருளோடு உடனுறையும் உமையம்மையார் விளையாட்டாகப் பெருமான் திருக்கண்களைத் தமது திருக்கரத்தால் பொத்தினார். சூரிய சந்திரர்களாகவும், அக்னியாகவும் உள்ள அக்கண்களை இறைவியார் பொத்தியதால் உலகமெங்கும் இருள் சூழ்ந்தது. அம்பிகை அஞ்சிக் கையை அகற்றினார். உலகம் ஒளிமயமாயிற்று. ஆயினும் அம்பிகை பொத்திய ஒருகணம் உலகிற்கு ஒரு ஊழிக்காலமாதலின் உயிர்கள் அனைத்தும் அந்நேரத்தில் துன்பத்துக்கு ஆளாயின. அப்பாவத்தைப் போக்கிக்கொள்ள விரும்பிய அம்பிகை காஞ்சிபுரம் அடைந்து சிவப் பரம்பொருளைப் பூசித்தார். இறைவன் வெளிப்பட்டு அம்பிகையை நோக்கித் திருவருணையை அடைந்து தவமியற்றித் தமது இடப்பாகத்தைப் பெறுமாறு அருளிச் செய்தார்.

பார்வதி தேவியார் அவ்வண்ணமே அண்ணாமலையை அடைந்து பவழக்குன்று மலையில் பர்ணசாலை அமைத்துக் கௌதம முனிவர் உதவியோடு கடும்தவம் புரிந்துவந்தார். கார்த்திகைப்பரணி நாளில் பிரதோஷ காலத்தில் மலைமேல் ஜோதியுருவத் தரிசனம் கண்டு எம்பெருமானின் இடப்பாகத்தைப் பெற்றருளினார். சிவபிரான் உண்ணாமுலை உமையாளோடும் உடனாகிய ஒருவரானார்.

## 7. திருக்கார்த்திகைத் தீபதரிசனம் :

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபவிழா உலகறிந்த பெருவிழாவாக நிகழ்கின்றது. இக்கோயிலின் பிரம்மோற்சவம் இவ்விழாவையொட்டியே கார்த்திகைத் தீபத்தைப் பத்துநாளாகக் கொண்டு நடைபெறுகிறது. தீபதரிசனத்தன்று உதயகாலத்தில் பரணி தீபமும், மாலை பிரதோஷக் காலத்தில் அர்த்தநாரீசுவரர் எழுந்தருளிக் காட்சிக் கொடுத்தலும் அவ்வேளையில் மலையின் உச்சியில் பெருமான் ஜோதி ஸ்வரூபம் காட்டலும், அதே சமயத்தில் ஆலயத்தின் பஞ்சமூர்த்திகளுக்குத் தீபாராதனை நிகழ்தலும் நடைபெறுகின்றன.

கார்த்திகை தீபம் உமையம்மை இத்தலத்தில் நடத்திய பெருவிழா எனவும், அம்பிகைக்கு இறைவன் தீபத் திருநாளன்று சோதி உருவாக மலைமீது காட்சிதந்து அவருக்குத்தம் இடபாகம் அளித்த திருநாள் எனவும் தலபுராணம் கூறுகிறது.

கார்த்திகைக்கு கார்த்திகை நாள் ஒருசோதி
மலைமீது காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர்காணில் பசிப்பிணியில்
லாதுலகில் மன்னிவாழ்வார்
பார்த்தி பர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிருமது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தின் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்

என்பது தலபுராணம்.

புத்திதரும் தீபம்நல்ல புத்திரசம் பத்துமுண்டாம்
சித்திதரும் தீபம் சிவதீபம் - சக்திக்கு
உயிராகும் சோணமலை ஓங்கிவளர் ஞானப்
பயிராகும் கார்த்திகை தீபம்.

என்பது கார்த்திகை தீபவெண்பா.

பெரிய செப்புக் கொப்பரை ஒன்றில் நெய், துணி கற்பூரம் ஆகியவற்றைக் கொண்டு மலையுச்சியில் இத்தீபம் ஏற்றப்படுகிறது. அன்பர்கள் பலரும் இத்தீபத்திற்கு வேண்டிய பொருள்களைக் காணிக்கையாகத் தந்து அருள்பெறுகின்றனர். தீபத்திருநாளன்று திருவண்ணாமலைத் திருக்கோயில் ஒளிவெள்ளத்தில் திகழும். கோபுரங்கள் மற்றும் எல்லா சந்நிதிகளிலும் திருவிளக்குகள் ஏற்றி வைக்கப்பெறும். பதினாறு கால் மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி அருட்காட்சி தர நிகழும். இவ்விழாவிற்கு இந்திய நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பலலட்சம் மக்கள் திருவண்ணாமலைக்குத் திரண்டு வந்து வழிபடுவதைக் காணலாம்.

இலக்கியங்களில் இவ்விழாவின் பழமையை அறியலாம். 'குன்றின்மேல்இட்ட விளக்கு' என்பது நம் நாட்டுப் பழமொழி. 'குன்றத்து உச்சிச்சுடர்' என்று சிந்தாமணியும், 'நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலைநாள் விளக்கு' எனக் கார்நாற்பதும் 'மதிநிறைந்த

அருமீன் சேறும் அகல் இருள் நெடுநாள் மருகு விளக்குறுத்து மாலை தூக்கிய பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய விழவு' என்று அகநானூறும் கூறும். தொல்காப்பியத்துள் வரும் விளக்குநிலை என்பதற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு என்று உரை வகுக்கிறார். தொல்கார்த்திகை நாள் விளக்கிடு பற்றித் திருஞானசம்பந்தர் தேவாரத் திருப் பதிகத்தில் குறித்தருள்கிறார்.

## 8. திருமலை வலம்வருதல் :

திருவண்ணாமலையில் சிவபெருமான் சோதிப்பிழம்பாய்த் தோன்றிய வடிவமே இங்கு மலையாக உள்ளது. மலையே சிவபிரானாக இத் தலத்தில் விளங்குவதால் இத்தலத்தில் மலைவலம் வருதல் மிக்க புண்ணியத்தைத் தருவதாகும். இம் மலையின் திருச்சுற்று 10 கிலோமீட்டர் தூரமுடையது.

இம்மலையை வலம் வருவோர் ஆதிவாரத்தில் சிவபதமும், சோமவாரத்தில் இந்திரவாழ்வும், மங்களவாரத்தில் பிறவிப்பிணி நீக்கமும், புதவாரத்தில் தேவராகும் தகுதியும், குருவாரத்தில் பதவியும், சுக்கிர வாரத்தில் விஷ்ணு பதவியும், சனிவாரத்தில் நவக்கிரகதோஷநிவர்த்தியும் பெறுவர். சிவராத்திரி வருடப்பிறப்பு, ஐப்பசி மாதங்களில் வலம் வருதல் மிக விசேடம்.

மலையைச் சுற்றி எண்திசைகளிலும் அஷ்ட லிங்கங்கள், அஷ்டநந்திகள், தீர்த்தங்கள் பலவும் பல மண்டபங்களும் ஆஸ்ரமங்களும் உள்ளன.

மலையின் அடிவாரத்தில் சேஷாத்திரி சுவாமிகள் சமாதி, ரமணாச்சிரமம், ஆதி அண்ணாமலையார் ஆலயம் முதலியனவும், தீர்த்தங்கள் பலவும் உள்ளன.

மலையின் இடைப்பகுதியில் கந்தாச்சிரமம், குகைகள், பாததீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன. கார்த்திகை, தை மாதங்களில் பெருமான் கிரிவலம் வருவார்.

விருபாக்ஷதேவர், ஈசான்யதேசிகர், சோஷாத்ரி சுவாமிகள், ரமண முனிவர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையின் நடுப்பகுதியிலும் அடிவாரத்திலும் குகைகள், ஆசிரமங்கள், தீர்த்தங்கள் நிறைய உள்ளன.

## 9. வழிபட்டோர் :

முருகப் பெருமான் திருக்கயிலையங்கிரியிலிருந்து சூரனை அழித்தற்குத் தெற்கு நோக்கி வரும் காலத்தில் திருவண்ணாமலையை வழிபட்ட வரலாற்றைக் கந்தபுராணத்தில் காணலாம்.

திருஞான சம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளித் தங்கி இருந்து அண்ணாமலையாரை வழிபட்டு இரண்டு திருப்பதிகங்கள் அருளியுள்ளார்.

திருநாவுக்கரசரும் அவ்வாறே இத்தலத்தை வழிபட்டு அருளிய திருப்பதிகங்கள் மூன்றாகும்.

சுந்தரர், நக்கிரர், கபிலர், பட்டினத்தார் முதலியோர் இத்தலத்தைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

வச்சிராங்கதபாண்டியன் குதிரை மீதேறி வேட்டையாடி வரும்போது புனுகு பூனையொன்றைத் துரத்திவர அப்பூனை அண்ணாமலையை வலம் வந்து வீழ்ந்து இறந்தது. பாண்டியனின் குதிரையும் உடனிறந்தது. இறந்த குதிரையும் புனுகு பூனையும் வித்யாதரர்களாக மாறி துர்வாச முனிவர் சாபத்தினால் தமக்கு அப்பிறவி ஏற்பட்டதையும் அண்ணா மலையை வலம் வந்ததால் சாபநீக்க அடைந்ததையும் கூறக்கேட்ட பாண்டியன் தன் மகனிடம் அரசுரிமையைத் தந்து விட்டு அண்ணாமலையை அடைந்து வலம் வந்தும் திருப்பணிகள் செய்தும் தேவேந்திரன் ஆனான்.

வல்லாள மகராசன் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன்; சிறந்த சிவபக்தனாக இம்மன்னன் விளங்கினான். இரப்போர்க்கு இல்லையெனாத விரதத்துடனும் அறநெறி வழுவாமலும் ஆட்சி புரிந்த இம்மன்னனிடம் அண்ணாமலையண்ணலும் ஒருநாள் அடியவர் வடிவுடன் அவனது அரண்மனைக்கு எழுந்தருளினார்.

அடியவராக வந்த பெருமான் தாம் மகிழ்வுடன் துயில ஒரு கன்னியைத் தமக்குத் தருமாறு கேட்டார். அரசன் பெண்களில் ஒருவரை தருவிக்குமாறு பணித்தனன். யாரும் கிடைக்காத நிலையில் அரசனது இளையராணி சல்லமாதேவி தம் கணவர் வாக்கைக் காக்கத் துணிந்து அடியவருடன் துயில்கொள்ள முற்பட்டார். அரசமாதேவி அடியவர் அருகில் சென்று அவரைத் தீண்டியவுடன் வந்த பெருமான் குழந்தையானார். அரசனும் அரசியும் தமக்குப் பிள்ளையில்லாக் குறைநீக்கப் பெருமானே வந்துள்ளார் என மகிழ்ந்தபோது குழந்தை மறைந்தது. பெருமான் வல்லாள மகராசரின் பக்திக்கும், கொண்ட விரதத்தைக் காப்பற்றத் துணிந்த மனஉறுதிக்கும் மகிழ்ந்து அவர்கட்கு சிவலோகம் வழங்கி அருள்

புரிந்தார். மேலும் ஈமக்கடனுக்கு பிள்ளையில்லையே என்ற மனக்குறை வேண்டாம். உங்கட்கு உத்தர கிரியை புரிவோம் என்றருளி மறைந்தார்.

மாசி மகத்தில் வல்லாள மகராசருக்குப் பெருமான் உத்தரகிரியை இயற்றும் ஐதிகவிழா இத் தலத்தில் நிகழ்கிறது.

அருணகிரிநாதர் கந்தக்கடவுளருள் பெற்று திருப்புகழ் கந்தரனுபூதி அலங்காரம் அந்தாதி திரு வகுப்பு முதலியன அருளியவர். திருவண்ணாமலை யில் அவதரித்தவர். வாழ்க்கையில் சலிப்பெய்தித் திருவண்ணாமலைக் கோயிலின் இரண்டாம் கோபு ரத்தின் மீதேறிக் கீழே விழுந்தபோது முருகப் பெருமான் இவரைக்காப்பாற்றி ஆட்கொண்டருளித் தம்மைப் பாடும் பணியை செய்துவரக் கட்டளை யிட்டருளினார்.

திருவண்ணாமலையில் அரசு புரிந்த பிரபுடதேவமகராயர் காலத்தில் அரசவைக் கவிஞ ராக இருந்த சம்மந்தாண்டான் என்னும் தேவி உபா சகருடன் வாதிட்டு வென்றவர். முருகன் 'முத்தைத் தரு' என அடியெடுத்துக் கொடுத்து இவருக்கு தீட்சை செய்தருளினார் என்பது வரலாறு. சமய குரவரைப் பின்பற்றித் தலங்கள் தோறும் சென்று முருகப் பெருமான் மீது இவர் பாடியருளிய திருப்புகழ் சந்தக் கவியமைப்புக்கும் முருகப்பெருமான் மீது அன்பர் கள் பக்திகொள்வதற்கும் உரிய சிறந்த நூலாகும். அருணகிரிநாதர் திருவண்ணாமலை முருகப் பெருமானுக்கு 78 திருப்புகழ்ப் பாடல்களை பாடி யுள்ளார்.

திருமுறை உலகில் பண்ணிசை வாணர்கள் திருமுறைகளை ஓதியபின் இவர் அருளிய திருப்புகழ் பாடி நிறைவு செய்வதைக் காணலாம்.

குகைநமசிவாயர் சில நூற்றாண்டுகளுக்கு முன் திருவண்ணாமலை குகையில் வாழ்ந்தவர். சிறந்த சித்திகள் பெற்றவர். இவருடைய சீடர் குருநமசிவாயர். இருவரும் ஞானக்கண்ணால் பலக் காட்சிகளைக் காணும் பேறு பெற்றவர்கள்.

ஈசானிய ஞானதேசிகர் இத்தலத்தில் திரு மடம் நிறுவிய பெரியார், இவர் திருமடம் ஈசானிய மடம் என வழங்குகிறது.

ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் திருவண்ணா மலை ஆதீனத்தின் முதல் குரவர். இவர் தம் வரலாற்றுச் சிற்பங்கள் ஆலயத்தில் உள்ளன. திருவண்ணாமலை ஆதீனம் இப்போது குன்றக்குடி யில் உள்ளது.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமி கள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், சேஷாத்ரி சுவாமிகள் முதலியோர் திருவண்ணா மலைத் தலத்தில் மிக்க ஈடுபாடுடைய ஞானிகளாவர்.

ரமண முனிவர் இத்தலத்தில் அண்மைக் காலத்தில் வாழ்ந்த அருளாளர். இவர் ஞானம் பெற்ற பாதாளலிங்கக் குகை ஆலயத்துள் இருக்கிறது. யோகிராம் சரத்குமார் சுவாமிகள் திருவண்ணா மலையில் இதுபோது தங்கிப் பலருக்கும் நல்லன தந்தருளி வருகிறார்.

## 10. முத்தித்தலங்கள் :

தருமையாதீன ஆதி பரமாசாரியார் ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள் முத்திதலங்கள் அனைத் தையும் தொகுத்தருளிய சிவபோகசார வெண்பாவில் இத்தலத்தை குறிப்பிட்டருளி உள்ளார்கள்.

''தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லை வனம் கூடல் முதுகுன்றம் -
நெல்லை களர்

காஞ்சிகழுக்குன்றம்மறைக் காடு
அருணை காளத்தி

வாஞ்சியம் என முத்தி வரும்''

## 11. திருவிழாக்கள் :

அண்ணாமலையாருக்கு நடைபெறும் நாள் வழிபாடுகளும் சிறப்பு வழிபாடுகளும் மிக்க பெருமை உடையன.

ஆறுகால நித்திய பூஜைகளோடு அமா வாசை, கார்த்திகை, பிரதோஷம், சுக்கிரவாரம், சோம வாரம் ஆகிய பஞ்ச பருவ உற்சவங்கள் நிகழ்கின்றன.

சித்திரைப் பருவவிழா, வைகாசிவிசாகம் ஆனித்தட்சிணாயயன விழா, ஆனித்திருமஞ்சனம் ஆடிப்பூரம், ஆகஸ்டு 15-ல் அருணகிரிநாதர் விழா ஆவணிமூலம், விநாயகர் சதுர்த்தி, புரட்டாசி நவ ராத்திரி, ஐப்பசி கந்தசஷ்டி, கார்த்திகைச் சோமவார சங்காபிஷேகம், திருக்கார்த்திகைப் பெருவிழா மார்கழி உத்தராயானம், தைத்திருவூடல், மாசிமகம் வல்லாளன் விழா, சிவராத்திரி, பங்குனி உத்திரம் திருக்கல்யாணம், போன்ற சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன.

# கங்கையாடலும் கார்த்திகைத் தீபமும்

— டாக்டர். சிவப்பிரியா
டெல்லி - 110 093.

இந்து நெறியின் திருவிழாக்கள் வெறும் பொழுதுபோக்கிற்காகவோ அர்த்தமற்ற சடங்குகளாகவோ அமையவில்லை. திருவிழாக்களும் கொண்டாடப்படும் முறைகளும் வாழ்வோடு பின்னிப்பிணைந்து மக்கள் அன்போடு கூடியிருப்பதற்கும், நட்பையும் உறவையும் வளர்ப்பதற்கும் அடிப்படையாக உள்ளன. திருவிழாக்கள் உயர்ந்த பண்பாட்டின் உயிர்நாடியாக விளங்குகின்றன. ஒவ்வொரு திருவிழாவிற்கும் ஒரு சிறப்புண்டு; கொண்டாடப்படும் முறைக்கு காரணம் உண்டு.

கங்கா ஸ்நானமும் வெடிவெடிப்பதும் தீபாவளியின் சிறப்பு அம்சம். **விடிவதற்கு முன்னர் எழுந்து எண்ணெய் வைத்து வழிபட்டு** எண்ணெய் தேய்த்து நீராடுவதற்கு கங்கா ஸ்நானம் என்று பெயர். நீராடியபின் ஒருவரை யொருவர் பார்த்து வணங்கி நலம் விசாரிக்கும்போது கங்கா ஸ்நானம் ஆயிற்றா என்று கேட்பர். வெள்ளிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்து நீராடுகின்றோம். நாள்தோறும் நீராடுகின்றோம். ஆனால் இவற்றையெல்லாம் யாரும் கங்கா ஸ்நானம் என்று கூறுவதில்லை. கங்கா ஸ்நானம் ஆயிற்றா என்று நலம் விசாரிப்பதும் இல்லை. தீபாவளியன்று மட்டும் எந்தநீரில் நீராடினாலும் அது கங்கா ஸ்நானம் ஆகின்றது. ஏனென்றால் அன்றுதான் கங்கை பூவுலகில் பாய்ந்தாள்; **பரமேசுவரன் பகிதரனுக்காக கங்கையைத் திருமுடியிலிருந்து பூவுல கிற்கு விடுத்த நாளே கங்காஸ்நானம் அல்லது தீபாவளி என்ற பெயரில் திருநாளாகக் கொண் டாடப்படுகின்றது.** பிரும்மம் அதாவது சிவம். கங்கையை பூமிக்கு விடுத்த நேரமே பிரும்ம முகூர்த்தம் என்று நீராடுவதற்குச் சிறந்த நேரமாக விளங்குகின்றது.

ஆகாய கங்கையைப் பூமிக்கு வரச் செய்வதற்காக பகிரத மன்னன் பெருந்தவம் புரிந்தான். கங்கை அப்படியே பாய்ந்தால் விண்ணும் மண்ணும் அழிந்துவிடும் என்பதால் பரமேசுவரன் கங்கையைத் திருமுடியில் தாங்கி ஏழு கிளைகளாகப் பிரித்து விடுத்தார். அண்ட சராசரங்களையெல்லாம் கடந்து அப்பாலுக்கு அப்பாலாக இருக்கும் பரமசிவன் திருமுடியிலிருந்து ஏழு கிளைகளும் பாய்ந்தபோது உலகமெங்கும் உள்ளகடல், ஆறு, கிணறு, குளம், ஏரி, குட்டை என அனைத்து நீரிலும் கங்கை நீர் பாய்ந்தது. புல் முதல் தேவர்கள் வரையுள்ள அனைத்து உயிரினங்களின் மேலும் கங்கை நீர் பொழிந்தது. அன்று எல்லா உயிர்களும் கங்கையில் நீராடின. அன்று எல்லோருக்கும் கங்கா ஸ்நானம் ஆயிற்று. அந்த நாள்தான் தீபாவளி என்ற பெயரோடு திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. இதனால் எந்த நீரில் குளித்தாலும் தீபாவளியன்று குளிக்கும் குளியல் கங்கா ஸ்நானமாக ஆயிற்று. ஈசன் விடுத்த ஏழுகிளைகளில் ஒரு கிளை பகிரதனைத் தொடர்ந்து சென்றது. அக்கிளைக்கு பாகிரதி என்று பெயர்.

கங்கா ஸ்நானம் இறையியல்பையும், பண்டைக்காலத்தில் பெண்களுக்கு இருந்த சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது. பரமசிவன் திருமுடியால் - மயிரிழையால் பெருநதியைக் கட்டிவைத்தது இறைவன் எல்லாம் வல்லவன், எல்லாவற்றையும் திருவருளால் செய்பவன், எது ஒன்று செய்வதற்கும் கருவியோ, துணையோ வேண்டாம் என்ற பரம் பொருள் இயல்பை - கடவுள் தன்மையை - முழுமுதல் தன்மையைக் காட்டுகின்றது. மங்கை பங்கனான பரமேசுவரன் கங்கையைக் கையாலோ, காலாலோ, தடுத்து நிறுத்தாமல் தலையில் அடக்கிய தன்மை **சைவ நெறியில், பண்டைச் சமுதாயத்தில் பெண்களுக்கு இருந்த உயரிய இடத்தையும் மதிப்பையும் காட்டுகிறது.**

**மையறு மனத்தனாய்ப் பகீரதன் வரங்கள் வேண்ட
ஐயமில் அமரர் ஏத்த ஆயிரமுகமதாகி
வையகம் நெளியப் பாய்வான் வந்திழி கங்கை என்னும்
தையலைச் சடையில் ஏற்றார் சாய்க்காடு மேவினாரே**

என்பது திருநாவுக்கரசரின் தேவாரத் துதி. கங்கையை ஏற்றதால் ஈசுவரனுக்கு ஆறுசூடி, நதிச் சடையன், கங்காதரன், கங்கைமுடியன் என்றெல்லாம் திருப் பெயர்கள் அமைந்தன.

காலங்கள் உருண்டு சென்றன. அன்று கங்கா ஸ்நான நாள். அதாவது தீபாவளித் திருநாள். கண்ணன் நரகாசுரனுடன் போர் புரியச் சென்றான். அவனுடைய இரண்டாவது மனைவி சத்தியபாமை

## இறைவனுக்கு அபிடேகம் செய்யும் பொருள்களும் பலன்களும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பஞ்சாமிர்தம் | - | தீர்க்காயுள் | இளநீர் | - | நன்மக்கட்பேறு |
| பால் | - | சாந்த குணம் | விபூதி | - | ஞானம் |
| தயிர் | - | திடகாத்திரம் | சந்தனம் | - | சுவர்க்கபோகம் |
| தேன் | - | பாடும் ஆற்றல் | பன்னீர் | - | புகழ் |
| நெய் | - | சுகவாழ்வு | | | |

தேரோட்டிச் சென்றாள். நரகாசுரன் எய்த அம்பினால் கண்ணன் மயக்கமடைந்து விழுந்தான். சத்தியபாமை தானே தேரையும் ஓட்டிப் போரும் புரிந்தாள். போரில் நரகாசுரன் இறந்தான். உயிர்விடும் நேரத்தில் தன்னுடைய இறந்த நாளை (திவசம்) எல்லோரும் கொண்டாடவேண்டும் என்று விரும்பினான். இதனால் பட்டாசு கொளுத்தி வெடிவெடிப்பது கங்கா ஸ்நானத் தோடு சேர்ந்தது.

கங்கா ஸ்நானம் அதாவது தென்னாட்டுத் தீபாவளி நீர்த் திருவிழா. வடநாட்டுத் தீபாவளி ஒளி அல்லது நெருப்புத்திருவிழா. இது முற்றிலும் தென்னாட்டுக் கார்த்திகை தீபத்தை ஒத்துள்ளது. பரமேசுவரன் அடிமுடியில்லாத நெருப்புத் தூணாக நின்று உலகமெங்கும் ஒளிபரப்பிய நாளே கார்த்திகை தீபத் திருவிழாவாகக் கொண்டாடப் படுகின்றது. உலகம் ஒளிவெள்ளமாக விளங்கிய இந்நாளை வீடெங்கும், ஊரெங்கும் விளக்கேற்றி வைத்துக் கொண்டாடுகின்றனர். அண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவும் வடநாட்டுத் தீபாவளித் திருவிழாவும் ஒன்றாக விளங்குகின்றன. விளக்கேற்றி வைத்தல், அலங்கரித்தல், பொரியுருண்டைகள், பலவித தின்பண்டங்கள் யாவும் தென்னாட்டுக் கார்த்திகைத் தீபத்திற்கும் வடநாட்டுத் தீபாவளிக்கும் ஒன்றாகவே உள்ளன. மிகத் தொன்மையான இக் கார்த்திகை தீபத் திருவிழாவை

தொல் கார்த்திகை நாள் .......... தையலார்
கொண்டாடும் விளக்கீடு

என்று ஞானக்குழந்தை திருஞானசம்பந்தரின் தேவாரம் போற்றுகின்றது.

கங்கா ஸ்நானம், கார்த்திகை தீபம் இவையெல்லாம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வந்தது. 1400 ஆண்டுகளுக்கு முன்பு முகம்மதியமும், 1995 ஆண்டுகளுக்கு முன்பு கிருத்துவம், யூதமும், 2500 ஆண்டுகளுக்கு முன்பு பௌத்தம், சமணமும் தோன்றுவதற்கு முன்னர் உலக மக்கள் அனைவரும் இத் திருவிழாக்களைக் கொண்டாடி நீருக்கும் நெருப்புக்கும் நன்றி செலுத்தி வந்தனர். **குவைத் நாட்டில் பலசிவன்கோயில்கள் இருந்ததையும் மற்றும் உலக நாடுகள் எல்லாம் சிவனை வழிபட்டு வந்ததையும்**

குவைப்பதி மலிந்த கோவே போற்றி
.........................
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்று மாணிக்கவாசகரின் திருவாசகம் போற்றுகின்றது. மக்கா, மதினா ஆகியவை முறையே மக்கீச்சுரம், மத்தீச்சுரம் என்ற பெயரோடு மிகச் சிறந்த சிவத் தலங்களாக இருந்ததைத் திருநாவுக்கரசரது தேவாரம் சிறப்பிக்கின்றது.

குக்குடேசுரம் மக்கீச்சுரம் கூறுங்கால்
ஆடகேச்சுரம் அகத்தீச்சுரம் அயனீச்சுரம்
மத்தீச்சுரம் சித்தீச்சுரம் தண்கானல் ஈடுதிரை
இராமேச்சுரம் என்று என்று ஏத்தி இறைவன் உறை
சுரம் பலவும் இயம்புவோமே

என்பது தேவாரத்து துதி. அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் சிவன் கோவில்களையும் சிவ லிங்கங்களையும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். **மனித வழிபாட்டை அடிப் படையாகக் கொண்ட செயற்கைச் சமயங்களின் வெறி** காரணமாக மற்றைய நாடுகளில் கங்காஸ்நானத் திருவிழா முற்றிலும் மறைந்து போயிற்று. தென்னாட்டிலே கங்காஸ்நானத்திற்கான காரணம் மறைந்து போயிற்று.

★ ★ ★

# கம்பனும் திருமுறைகளும்

—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

## ஒன்பதாம் திருமுறை

ஒன்பதாம் திருமுறையில் ஒருபதிகம் முருகப்பெருமானைப்பற்றிக் காணப்படுகின்றது. முருகப்பெருமானின் அழகை விவரிக்க வந்த சேந்த னார் ''இறைவனே! உன் அழகைச் சுடர்விளக்கா? சூரியனா? மின்னலா? பவளக்கொழுந்தா? பொன் சொரிந்த சிந்தூரப்பொடியோ? மாணிக்கக் குவி பலோ? அழகின்தலைமை'' என ஐயுற்று என் மகள் உன்மீது ஆசைகொண்டாளோ?'' என ஒரு செவிலித்தாய் கூறுவதாக அமைத்துள்ளார்.

**ரிந்தசெஞ்சுடரோ! பரிதியோ! மின்னோ! பவளத்**
**தின்குழவியோ? பசும்பொன்**
**சொரிந்தசிந்துரமோ! தூமணித்திரளோ? சுந்தரத்து**
**அரசிது என்னத்**
**தெரிந்தவைதிகர்வாழ் திருவிடைக்கழிவாழ்**
**திருக்குராநீழற்கீழ்நின்ற**
**ரிந்தவெஞ்சிலைக்கை மைந்தனை அஞ்சொல்**
**மையல் கொண்டுஐயுறும் வகையே**

சிவன் என்னும் நாமம் தமக்கேயுடைய செம்மேனி அம்மானாகிய சிவகுமாரனைச் செஞ் டரோ? பரிதியோ? மின்னோ என்றெல்லாம் பேசினார் சேந்தனார்.

நீலத்திருமாலின் கோலத்தைப்புகழவந்த ம்பர், இராமபிரானின் கரியநிறமான சோதியில் **ரியனே ஒளி குறைந்து விட்டான்** எனப்பாடிய தோடு, ஒளிமிகுந்த செம்மேனியுடைய முருகப் பெருமானைப் பாடியதுபோல இராமபிரானைக் ருஞ்சோதி என வர்ணித்துப் பாடியுள்ளார்.

**வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின்**
**மறைய**
**பொய்யோ எனும் இடையாளொடும் இளையா**
**னொடும் போனான்**
**மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை**
**முகிலோ?**
**யோ! இவன் வடிவென்பதோர் அழியா**
**அழகுடையான்**

எனக் கருஞ்சோதியான இராமபிரானின் அழகை **அழியா அழகு** எனக் கூறியுள்ள நயம் உணர்க. சிவந்த ஞாயிறு முருகன்; **கம்பன் இராமனை கருஞாயிறு என்றே அழைத்துவிட்டான்.**

பிறவியைக் கடல் என்பர் பெரியோர். துன்பக் கடலான பிறவி ஆசைக்கடலைக் கொண்டுவரும். ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்றால் துயரக் கடலில்தள்ளும். ஐம்புலன்களினால் ஏற்படும் ஆசைக் கடல் இறைவனை மறக்கச்செய்யும். அப்போது இறைவன் வந்து **அஞ்சேல்** என அபயமளிப்பார். இந்த நிலையைக் கருவூர்த்தேவர் **இவ்வரும் பிறவிப் பௌவநீர்நீந்தும் ஏழையேற்கென்னுடன் பிறந்த ஐவரும் பகையே ஆர்துணையென்றால் அஞ்சல் என்றருள் செய்வான்** என சிதம்பரம் நடராசப் பெருமான் காப்பார் என்றருளினார். இந்நிலையில் இறைவனது பெருமையை மனத்தினால் சிந்தித்து வாயினால் பாடிக் கைகளால் தொழ அஞ்சேல் என அருள்வான் என்பது முன்னோர் கண்ட உண்மை.

சீதாபிராட்டி அனுமனிடம் ''இவ்வளவு பெரியகடலை இவ்வளவு சிறியவனான் நீ எப்படித் தாண்டி வந்தாய்?'' எனக் கேட்க, அனுமன் ''அன்னை! உனது நாயகனான இராமபிரானின் திருவடிகளை ஒருமையுடன் (திரிகரண சுத்தியுடன்) வணங்கியவர்கள் பெரிய மாயா சமுத்திரத்தையே கடந்து விடுகின்றார்கள். அவனருளால் இக்கடலைக் கடந்துவந்தேன்.'' என்று கூறுகிறான்.

**சுருங்கிடை! உன்னொரு துணைவன் தூயதாள்**
**ஒருங்குடை உணர்வினர் ஒய்வினை மாய்கையில்**
**பெருங்கடல் கடந்தனர். பெயரும் பெற்றிபோல்**
**கருங்கடல் கடந்தேன் இக்காலினால் என்றான்.**

பஞ்சசேனாபதிகள் என்ற ஐவர் போருக்கு வர அவர்களைக் கொன்ற அனுமன் ஐம்புலன்களை வென்ற ஞானம்போல் விளங்கினான் எனக்கம்பர் **ஐம்பெரும்புலன்களொத்தார் அவனும் நல்லறிவை ஒத்தான்** எனக் குறிப்பிட்டுள்ளார்.

★ ★ ★

இறைவனை ''பிரமனா? திருமாலா? இந்திரனா? சூரியனா? முக்கண்மூர்த்தியான சடாமகுடதாரியான சிவபெருமானா? இடபவாகனனான முப்புரமெரித்த சிவபெருமானா? பிறர், அவர் அவர் எண்ணும் உருவத்தில் தோன்றுபவனா'' எனக் கங்கை கொண்ட சோளேஸ்வரப் பதிகத்தில் கருவூர்த் தேவர் வர் ணிக்கிறார்.

**சுருதிவானவனாம்! திருநெடுமாலாம்! சுந்தர**
**விசும்பின் இந்திரனாம்!**
**பருதிவானவனாம்! படர்சடைமுக்கட்பகவனாம்**
**அகவுயிர்க்கமுதாம்!**
**எருதுவாகனனாம்! எயில்கள் மூன்றெரித்த ஏறு**
**சேவகனுமாம்! பின்னும்**
**கருதுவார்கருதும் உருவமாம்! கங்கைகொண்ட**
**சோளேச் சுரத்தானே.**

இதே கருத்தை இராவணனது சபையில் அனுமன் இராமபிரானைப்பற்றிக் கூறும்போது ''ஆதியும் நடுவும் முடிவுமில்லாத பெரியோன் கைவில்லேந்தி நிற்பவன் யார் தெரியுமா? கைலையிலிருந்த பெருமான் சூலாயுதத்தை வைத்துவிட்டு வந்தான். ஆலிலையில் துயின்ற பெருமான் தன் சங்குச் சக்கரங்களை விட்டுவந்தான். தாமரையில் வாழ்ந்த பிரமன் தன் கமண்டலத்தை வைத்து இறங்கிவந்தான். இம்மூவருமே அயோத்தியில் இராமனாக வந்தனர்'' என்றார்.

**மூலமும் நடுவும் ஈறும் இல்லதொர் மும்மைத்தாய**
**காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில்லேந்தி**
**சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்து: தொல்லை**
**ஆலமும் மலரும் வெள்ளிப்பொருப்பும் விட்டு**
**அயோத்திவந்தான்.**

இராமபிரானின் போர் வலிமை கண்டு வியந்த இராவணன் ''சிவனோ அல்லது பிரமனோ அல்லது திருமாலோ இராமபிரானாக வந்துள்ளனர் போலும்'' என்று நினைக்கிறான்.

**''சிவனோ அல்லன் நான்முகன் அல்லன் திருமாலாம்**
**அவனோ அல்லன் மெய்வரமெல்லாம் அடுகின்றான்''**

கருவூர்த்தேவர் **''பின்னும் கருதுவார் கருதும் உருவமாம்''** என்ற அடி ''நீ எவ்வுருவத்தில் எந்தப்பெயரில் இறைவனை விரும்புகிறாயோ அந்த உருவத்தில் அந்தப்பெயரில் இறைவன் தோன்றுவார்'' என **தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே/ தமருகந்தது எப்பேர் மற்றப் பேர்/ தமருகந்தது . எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே - அவ்வண்ணம் ஆழியானாம்** என்ற பொய்கையாழ்வாரின் திருவாக்கை ஒத்துள்ளது. இதையே கம்பன்

**உலகம்யாவையும் தாம் உளவாக்கலும்**
**நிலைபெறுத்தலும்: நீக்கலும்: நீங்கலா**
**அலகிலா விளையாட்டுடையார்: அவர்**
**தலைவர்'' அன்னவர்க்கே சரண் நாங்களே!**

என்றும்

**'ஒன்றே ' என்னின் ஒன்றேயாம்: 'பல' என்றுரைக்**
**கில் பலவேயாம்**
**'அன்றே' என்னின் அன்றேயாம்: 'ஆமே'**
**என்னின் ஆமேயாம்**
**'இன்றே' என்னின் இன்றேயாம்: 'உளது' என்று**
**உரைக்கில் உளதேயாம்**
**நன்றே நம்பிகுடிவாழ்க்கை நமக்கிங்கென்னோ**
**பிழைப்பம்மா''**

என்றும் பாடியருளினார் தமிழ்நாட்டின் கவிச் சக்கரவர்த்தி.

★ ★ ★

சேந்தனார் பாடியருளியுள்ள திருப்பல்லாண்டு இறைவனுக்குப் பல்லாண்டு பாடியருளிய பெரியாழ் வாரின் கருத்தை ஒத்து அமைந்துள்ளது. திருப்பல் லாண்டின் இரண்டாவது பாடலில்

**அண்டம் கடந்தபொருள் அளவில்லதோர் ஆனந்த**
**வெள்ளப்பொருள்**
**பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே**
**பல்லாண்டுகூறுதுமே**

என்ற வரிகளின் கருத்தைக் கம்பன் மிக அழகாகக் கையாண்டுள்ளான்.

முதுமை துன்பமாகும். வயது முதிர்ந்து வாழ்ந்தால் உடல்நலம் குன்றித் தாகத்திற்கு ஒரு சிறுபாத்திரம் தண்ணீர் வேண்டுமென்றால் கூட பிறர்கையை எதிர்பார்க்கும் மிகக் கொடிய துன்பமான வாழ்வு முதுமையாகும்.

உயிர்நீங்கும்வரை உடல் உரத்துடன் நீடுழி வாழ்க என்பதுதான் வேதவாக்கு **அரோகதிடகாத்ரதா சித்திரஸ்து - தீர்க்காயுஷ்மான்பவ** என்பது ஆசி கூறும் மந்திரம்.

தன் உயிரை விடுவதற்குப் பிராட்டி முயன்ற காலத்தில் எதிரில் தோன்றி கணையாழி கொடுத்துக் களிப்பூட்டிய அனுமானை சீதாபிராட்டி **உலகம் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி** என்று வாழ்த்துகின்றாள். பண்டும் இன்றும் என்றும் உள்ள

பொருள்போல் வாழ்வாயாக என்ற திருமுறை வாக்கைத் தழுவியே கம்பன் இவ்வாறு கூறியுள்ளான்.

### திருமுறையில் வாழ்த்துப்பா

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயது! எல்லாம் அரன் நாமமே**
**சூழ்க! வையகமும் துயர்தீர்கவே**

### கம்பனில் அனுமன் வாழ்த்து

**வாழி சானகி! வாழி இராகவன்!**
**வாழி நான்மறை: வாழியர் அந்தணர்!**
**வாழி நல்லறம் என்றுற வாழ்த்தினான்**
**ஊழி தோறும் புதிதுறும் சீர்த்தியான்.**

திருமுறை ஆசிரியர்கள் இராமகாதை அருளிய கம்பன் வாக்குகளைப்பாடி நாம் என்றும் நல்வாழ்வு வாழ இறைவனை வணங்குவோமாக!

திருச்சிற்றம்பலம்.

★ ★ ★

## தானங்களில் எது உயர்ந்ததானம்?

தானங்கள் பலவற்றை விட உயர்ந்தது அன்னதானம்.
அதனின் உயர்ந்தது கல்விதானம்
அதனின் உயர்ந்தது நிதானம்
அதனின் உயர்ந்தது சமாதானம்.
யாரொருவர் மனம் உண்மை சமாதானம் கொண் டுள்ளதோ
அவருக்கு இறைவனின் சன்னிதானம் எளிதில் கிடைக்கும்.

## இறைவன் ஒருவரா? பலரா?

பாண்டங்கள் வெவ்வேறு ஆனாலும்
மண் ஒன்றுதானே!
அணிகள் பலவானாலும்
பொன் ஒன்று தானே!
பசுக்கள் பலவானாலும்
பால் ஒன்றுதானே
மதங்கள் பலவானாலும்
இறைவன் ஒருவரேதாம்.
''ஒன்றேகுலம் ஒருவனே தேவன்''
இதை மறவற்க.

## தாயை வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் யாது?

உலகை ஆறுமுறை வலம் வருவதைவிடவும், கங்கையில் பதினாயிரம் முறை குளிப்பதை விடவும், தாயை ஒருமுறை பக்தியுடன் வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் பெரிது. தாயின் மனம் குளிரும் படியாக நல்லறம் கடைப்பிடித்து வாழ்வதால் கிடைக்கும் புண்ணியம் அதனின் பெரிது.

# திருவண்டப்பகுதியும் இன்றைய விஞ்ஞானமும்

— மு.பெ. சத்தியவேல் முருகன் B.E.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கோள்களில் ஒன்றான பூமியைப் பார்த்த யூரிகாரிகான் நிலையே இவ்வாறிருக்குமானால் கோள்களும் ஒரு சூரியனும் சேர்ந்த ஒரு அண்டம் - மற்றும் இதுபோன்ற அண்டங்கள் நூறுகோடிக்கு மேற்பட்டனவற்றை மணிவாசகர் பார்த்த மெய் ஞானக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகள் ஏது?

இன்றாவது விஞ்ஞானம் பலபடிகள் முன் னேறி பல கருவிகரணங்கள் உள்ளன. இன்னும் அமெரிக்காவில் பால்டிமோரில் மலையின்மீது வைக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய டெலஸ்கோப் மூலம் சிலசில நட்சத்திரங்களை மட்டுமே காண முடிகிறது. இவை ஏதும் இல்லாத மூன்றாம் நூற் றாண்டில் வாழ்ந்த மணிவாசகர் நூற்றொரு கோடி யின் மேற்பட்ட விரிந்த அண்டங்களைப் பார்த் திருப்பாரேயானால் அந்தக் காட்சியை என்னென்று கூறுவது? அதற்கு உரை வரைந்து கரை செய்ய முடியுமா? எனவேதான் வள்ளலார், இது உரையுள் அடங்காத அனுபவம், அதனை ''என்னை, வா! என் பக்கத்தில் இரு என்று அமர்த்தி அதன் உண்மை தோன்ற உணர்த்துவாயாக'' என்று மணிவாசகரை வேண்டினார்.

இனி, அண்டங்கள் பலவற்றை ஒரு சேரப் பார்த்த மணிவாசகர் வேறு ஒரு விஞ்ஞான உண்மை யையும் கூறினார். அதாவது அண்டங்கள் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்திருந்தன; இவை எப்படி வானில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன என்பதைப் பற்றியும் மணிவாசகர் கூறுகிறார். ஒரு கோள் இன்னொரு கோளை; ஒரு அண்டம் இன் னொரு அண்டத்தை இழுத்துக்கொண்டு நின்றன என்றார். ''ஒன்றனுக்கு ஒன்று நின்ற எழில் பகரின்'' என்பது அவர்தம் வாக்கு. இதன்மூலம் ஈர்ப்புச் சக்தி (Gravitational Force) என்ற ஒன்றினை மணிவாசகர் கூறுகிறார்.

14- ஆம் நூற்றாண்டிற்கு பின் வந்த நியூட்டன் என்ற விஞ்ஞானி புவிஈர்ப்புச் சக்தியைக் கண்டு பிடித்தான் என்று விஞ்ஞான உலகம் கூறும். இந்தப் புவிஈர்ப்புச் சக்தியை - கோள்களுக்கிடையே நிலவும் இந்தச்சக்தியை மணிவாசகர் 3-ஆம் நூற்றாண்டி லேயே இந்தத் திருவண்டப்பகுதியில் கூறியதைக் காணும்போது நம்மால் பெருமிதம் கொள்ளாமல் இருக்க இயலுமா? எத்தனை பெரிய விஞ்ஞான உண்மை? எவ்வளவு சுலபமாக மணிவாசகர் கூறு கின்றார்! ஒன்றனுக்கு ஒன்று என்று இரு கோள்களை அல்லது அவற்றின் தொகுதியான அண்டங்களை இணைக்கும் 'கு' என்ற ஓர் உருபெழுத்தால் உணர்த் திய அவரது மெய்ஞ்ஞான விசாலத்திற்கு ஈடு இணை ஏது? அவரது மெய்ஞ்ஞான விசாலத்தில் விஞ்ஞான உலகம் மடங்கி நிற்பதைக் காண்கையில் நமது வியப்பு எல்லை கடந்துபோகிறது.

இப்படிப் பலகோடி அண்டங்கள் எல்லாம் பிரபஞ்சத்தில் விரிந்து கிடக்க அவையனைத்தும் இறைவனது எல்லையற்ற வடிவின்முன் சின்ன சின்ன அணுவாகத் தெரிகின்றனவாம். அதாவது பழங்காலத்தில் வீடுகளின் மேற்கூரையில் வெளிச்சம் வருவதற்காக சிறிய சதுரமாகக் கண்ணாடிகளைப் பொருத்தி இருப்பார்கள். அது வழியே சூரிய வெளிச்சம் நேரே வீட்டினுள் கற்றையாக விழும். அந்தக்கற்றை ஒளியில் தூசிப்போல பற்பல அணுக்கள் இங்குமங்குமாக ஓடி இயங்கிக் கொண்டிருப்பது தெரியும். இறைவன் திருமுன் இந்தப் பலகோடி அண்டங்களும் தூசி அணுக்களாக இருக்கின்றனவாம். அவை அப்படித் தோன்றும்படி இறைவன் பெரிய வனாக இருக்கின்றானாம்.

''இல்நுழை கதிரின் துன்னணு புரையச்
சிறியவாகப் பெரியோன்''

என்று இறைவனைப் போற்றுகிறார் மணிவாசகர், ஆ! அந்தக் காட்சி எப்படி இருந்திருக்கும்! அதனால்தான் வள்ளலார் அதனை எனக்கு எடுத்துரைத்தருள வேண் டும் என்று மணிவாசகரை வேண்டினார்.

இனி அடுத்த சில வரிகளில் மேலும் ஒரு விஞ்ஞான உண்மையை வைக்கிறார் மணிவாசகர். அவ்வரிகள் வருமாறு.

''தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பேரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச்
சூறை மாருதத்து எறியது வளியில்
கொட்கப் பெயர்க்கும் குழகன்''

இவ்வண்டங்களைப் படைத்தும், காத்தும், அழித்தும் முத்தொழில் செய்பவன் இறைவன். மாப் பேரூழியில் இறைவன் இந்த அண்டங்களை அழிக்கின்றான். பின்னர் மீளவும் படைக்கிறான். இங்கே அண்டங்களை அழித்தல் என்பதன் பொருள் என்ன என்று மணிவாசகர் கூறுகிறார்.

ஒரு பொருளை அழித்தல் என்றால் அந்தப் பொருளை முற்றுமாக இல்லையாகச் செய்துவிடுதல் என்பது பொருளல்ல. அப்படிச் செய்யவும் முடியாது. அப்படியானால் அழிவு என்பதுதான் என்ன? தூலமாகக் கண்ணுக்குத் தெரியாத அளவில் ஒடுக்கிச் சூக்குமாகச் செய்தல். சூக்குமம் கண்ணுக்குத் தெரியாது; தூலம் கண்ணுக்குத் தெரியும். ஆகவே எந்தப் பொருளையும் முற்றும் இல்லையாகச் செய்யும்படி அழிக்க முடியாது. அதேபோல சூக்குமத்தில் இல்லாத எந்தப் பொருளையும் புதிதாகத் திரட்டித் தூலமாக உருவாக்கமுடியாது.

இதனை விஞ்ஞானம், "Matter can neither be created; nor be destroyed" என்று கூறுகிறது. இது நியூட்டன் என்ற விஞ்ஞானியின் தியரம் ஆகும். இதைத்தான் சைவசித்தாந்தம் தனக்கு அடிப்படையாகக் கொள்ளும் சற்காரியவாதம் ''இல்லது தோன்றாது; உள்ளது சிதையாது'' என்று மிகச் சுருக்கமாகக் கூறுகின்றது.

இதனை - இந்த விஞ்ஞானக் கருத்தை - அப்படியே எடுத்து மொழிகிறார் மணிவாசகர் மேற்கூறிய வரிகளில், ஒடுக்க காலத்தில் இறைவன் அண்டங்களை நுண்ணணுப்பொருள்களாகப் பிரித்தலின் ''ஆக்கமொடு நீக்கமும்'' என்றும், அவை தோன்றும் காலத்துப் பருமையனவாகி உருக்கொள்ளுமாதலின் 'தூலத்து நிலையும்' என்றும் கூறினார். அதாவது நிரல் நிறையாக ஆக்கமொடு நீக்கமும், தூலத்தொடு நிலையும் என்று மேற்கூறிய வரிகளில் சேர்த்துக் கூட்டிப் பொருள் செய்தல் வேண்டும்.

எனவே, பொருள் அழியவில்லை; அண்டங்களை இறைவன் அழிப்பதில்லை; அவற்றைச் சூக்குமமாகச் செய்கின்றான். மீளவும் அண்டங்களாகத் தோற்றுவிக்கும்போது 'சூ! மந்திரக்காளி' என்று இல்லாத பொருளில் இருந்து இறைவன் தோற்றுவிப்பதில்லை; சூக்குமமாக இருக்கும் பொருளைத் திரட்டித் தூலமான அண்டங்களை உருவாக்குகிறான். எத்துணை விஞ்ஞானரீதியான பார்வை இது! இதனை உணர்த்திப் பாடிய மணிவாசகரின் பெருமையை என்னென்பது!

இவையனைத்தும் அண்டங்களை அணுவாகச் செய்யும் இறைவனது உலகம் கடந்த நிலை. இனி, அண்டங்களில் தாமும் இயைந்து நிற்கும் இறைவனது உலகத்துப்பட்ட நிலையைப் பற்றிக் கூற வருகிறார் மணிவாசகர். இங்ஙனம் கடந்தும் உள்ளும் இருப்பதால்தானே அவனுக்குக் கடவுள் என்ற பெயர் வந்தது. உலகின் உள்ளியைந்த நிலையில் முதலில் சூரியனை எடுத்துக்கொள்கிறார் மணிவாசகர்.

சூரியன் என்பவனையே கடவுளாகக் கொள்பவர்களும் உண்டு. அவர்களுக்குச் சௌரர்கள் என்று பெயர். இன்றும் ஒரு நாடே சூரியனைக் கடவுளாக வணங்குகிறது என்றால் அது ஜப்பான் நாடு என்பது உலகறிந்த உண்மை. எனவே ஜப்பானியர்களைச் சௌரர்கள் என்று கூறலாம். அத்துடன் ஆரிய வேத ஒழுக்கத்தைப் பின்பற்றுபவர்கள் பலர் காலை மாலை ஆகிய சந்திகளில் சூரியனைக் காயத்ரி மந்திரம் சொல்லி வணங்குவதைப் பார்க்கிறோம்.

சூரியனைக் கடவுளாக எண்ணி வழிபடுவதைச் சைவம் ஏற்பதில்லை.

''செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத் துமே''

என்று அந்த காயத்ரி மந்திரத்திற்கும் இறைவன் அஞ்செழுத்து இறைவனாகிய சிவபெருமானே; சூரியனன்று என்று மறுத்து ஓதினார் சுமார்த்த அந்தணரான சம்பந்தர்.

''அருக்கனாவான் அரன்உரு அல்லனோ''

என்று சூரியனுக்கும் கடவுள் அரன் அல்லவா என்றார் அப்பரடிகள். அருக்கன் என்றால் சூரியன் என்று பொருள்.

இந்தச் சூரியனைப் பற்றி விஞ்ஞானம் என்ன கூறுகிறது? சூரியன் என்பது 6000 டிகிரி சென்டி கிரேடில் கனன்று கொண்டிருக்கும் ஹீலியம் என்ற ஒரு வாயுக்கோளம் என்று கூறுகிறது. இதில் கவனிக்க வேண்டியது என்ன என்றால் இந்த வெப்பம் எப்போதும் இப்படியே இருக்குமா? அல்லது நாளுக்கு நாள் குறைந்து சூரியன் பனிக்கட்டியாக உறைந்து விடுமா?

விஞ்ஞானரீதியாகப் பார்ப்போமானால் வெப்பம் மூன்று வகையில் வெளியேறும்:

1) வெப்பக் கடத்தல் 2) வெப்பச் சலனம் 3) வெப்பக் கதிர்வீச்சு.

இதில் சூரியன் வெளியேற்றும் வெப்பத்தினை வெப்பக் கதிர்வீச்சில் விஞ்ஞானிகள் அடக்கிக் காட்டுவர். கதிர்வீச்சு முறையில் சூரியனை விட்டு வெப்பம் வெளியேறுமானால் அதன் வெப்பம் கொஞ்சம் கொஞ்சமாக நட்டமாகிக் கொண்டே வருதல் வேண்டும். அப்படியானால் சூரியன் 6000 டிகிரி சென்டிகிரேடில் தொடர்ந்து இருத்தல் இயலாது. எனவே சூரியன் ஒரு நாள் பனிக்கட்டியாய் உறைந்து விடுதல் தவிர்க்க முடியாது போலிருக்கிறதே என்று எண்ணத் தோன்றும். ஆனால் விஞ்ஞானிகள் சூரியனின் வெப்பநிலை 6000 டிகிரி சென்டிகிரேடிற்குக் குறைவான வெப்பநிலையை அடைவதில்லை என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். வெப்ப இழப்பு இருந்தாலும் இழப்பு ஈடு செய்யப் பட்டுக் கொண்டே இருக்கிறது என்பது விஞ்ஞானம்.

யார் ஈடுசெய்வது? தனக்குத் தானே சூரியன் ஈடுசெய்து கொள்ளுமா? சூரியன் என்பது ஒரு ஹீலியம் என்ற வாயுக்கோளம் என்று விஞ்ஞானம் கூறுதலால் அது சடப்பொருள். சடப்பொருள் தனக்குத் தானே ஈடுசெய்து கொள்ள முடியாது? எனவே யார் ஈடுசெய்வது?

மணிவாசகர் கூறினார்: ''வேறு யார்?
இறைவன் தான்!''
...''நாடொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன்''

அருக்கன் என்றால் சூரியன் என்று ஏற்கெனவே கூறியிருக்கிறோம். அருக்கனாகிய சூரியனில் இறைவன் நாடோறும் கனன்றெழும் சோதியை அமைக்கின்றானாம். எனவேதான் சூரியன் தனது வெப்ப நிலையை இழக்காமல் இருக்கிறது.

இந்த விஞ்ஞான உண்மையை பல நூற்றாண்டுகட்கு முன்னரே கூறிய மணிவாசகரின் மதி நுட்பத்தை என்னென்று கூறுவது?

இஃதறியாமல் சூரியனையே கடவுளாக எண்ணி இருந்தவர்களின் நடுவே சூரியன் சூரியனாக இருப்பது இறைவனால் என்றோதிய மணிவாசகர், சூரியன் கடவுளல்ல என்று மறுத்தோதிய சம்பந்தர், அப்பர் போன்ற அருளாளர்கள்தான் எத்துணை மதிநுட்பம் வாய்ந்த பெரியோர்கள்! இவர்களை நமது சமயகுரவர்களாகப் பெற்ற நமது பாக்கியம் என்னே!

சூரியனையே கடவுளாகக் கொள்வதில் வேறு ஒரு ஆபத்தும் உண்டு. விஞ்ஞானரீதியாகப் பார்ப்போமானால் ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியன். அப்படியானால் பல கோடி நட்சத்திரங்கள் உண்டு அல்லவா? ஆக பலகோடி சூரியர்கள் உண்டு என்று ஆகிறது. அதன்வழி நாம் பார்த்து வணங்கும் ஒரு சூரியனைப் போல பல கோடி சூரியர்களையும் கடவுளாக வணங்க வேண்டும். எனவே கடவுள் ஒருவர் அல்லர் என்று ஆகி பலகோடி கடவுள்கள் உண்டு என்று கூற வேண்டிய குழப்பத்திற்குக் கொண்டு சென்றுவிடும் ஆபத்து அக்கொள்கையில் மறைந்திருப்பதை உணர வேண்டும்.

இனி அடுத்து மணிவாசகர் சந்திரனைக் கூறுகிறார். சந்திரனில் தண்மையை வைத்தவன் இறைவன் என்று பாடுகிறார்: 'திருத்தகு மதியில் தண்மை வைத்தோன்' என்பது அவரது வாக்கு. சந்திரனுக்கு விண்கலம் விடுகின்ற காலம் இது. ஆர்ம்ஸ்ட்ராங் என்ற அமெரிக்கர் காலை உறுதிபட சந்திரனில் வைத்துவிட்டு வந்தவர். முதலில் விஞ்ஞானிகள் சந்திரனில் தண்ணீரே இல்லை என்று கூறி வந்தனர். ஆனால் அண்மைக்கால விஞ்ஞான ஆராய்ச்சிகள் சந்திரனில் தண்ணீர் இருக்கிறது என்று உறுதி செய்கின்றன. எனவே விஞ்ஞானிகள் இடையில் ஆட்டம் கண்டாலும் மெய்ஞ்ஞானியான மணிவாசகர் அசையாத உறுதிபட சந்திரனில் தண்மை அமைத்தவன் இறைவன் என்று விஞ்ஞான உண்மைக்கு மாறுகோள் படாது கூறுகின்றார்.

இதேபோன்று இன்னொரு விஞ்ஞான உண்மை தடுமாற்றம் அடைந்தது உண்டு. அது ஆகாயம் என்ற தத்துவம். ஐந்து பூதங்கள் என அடுக்கிக் கூறும்போது மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்று தத்துவ உலகம் பேசும். தமிழர்களின் சொத்தான சங்க நூல்களில் கூட இந்த ஐந்து பூதங்களும் பேசப்படுகின்றன. இவற்றின் மயக்கமே இந்த உலகம் என்று புறநானூறு கூறுகிறது.

ஆனால் தத்துவ உலகில் புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஆகாயம் என்ற தத்துவத்தை ஏற்றுக் கொள்வதில்லை. பூதங்கள் ஆகாயம் ஒழிந்த ஏனைய நான்கு மட்டுமே என்பது அவர்களது கொள்கை.

ஆனால் இன்றைய விஞ்ஞானம் ஆகாயத்தின் இருப்பை ஏற்றுக்கொள்கிறது. இன்னும் சொல்லப் போனால் பிரபஞ்சத்தை அது இரண்டாகப் பிரித்துப் பேசும்போது காலம், இடம் என்று கூறுகிறது. இடத்தை space என்று கூறுவது விஞ்ஞானம். சைவ சித்தாந்தமும் பிரபஞ்சப் பொருள்கள் அனைத்திற்கும் இடம் கொடுத்து நிற்பது ஆகாயம் என்றே கூறுகிறது. அதற்கேற்ப இடத்தை place என்று கூறாமல் space என்று கூறுகிறது இன்றைய விஞ்ஞானம்.

இங்கே ஒரு சின்ன செய்திகூட தொடர்பு பற்றி சிந்திக்கத்தக்கது. சைவ சித்தாந்தத்தில் கடல் என்பது நீரைக் குறிப்பதல்ல. நீருக்கு இடம் கொடுத்த ஆகா யத்திற்குத் தான் கடல் என்று பெயர் என்று சைவ சித்தாந்தம் கூறும். அதற்கேற்ப ஆகாயக்கலங்களை விஞ்ஞானிகள் Spaceship என்று கடல்நீரில் ஓடும் கப்பல் போலகுறிப்பது சைவ சித்தாந்தக் கருத்திற்கு அணி செய்வதாக அமைந்திருப்பது நாம் கண்டின்புறத் தக்கது. அதாவது காற்று மண்டலம் வரை செல்வதை Aeroplane என்றவர்கள், காற்றுமண்டலத்தையும் தாண்டி ஆகாயத்தில் வெட்டவெளியில் செல்வதை Spaceship என்றது இந்த வேறுபாட்டையும் ஆகா யத்தின் இருப்பையும் காட்டும்.

விஞ்ஞானம் ஒப்புக்கொள்கிற இந்த ஆகா யத்தைப் பொய் என்றனர் புத்தர்கள். அவர்கள் சொல் வதுதான் பொய் என்றார் மணிவாசகர். ஆகாயத்தைப் பற்றிப் பாடும்போது அவர் ''பொய்தீர் வானிற் கலப்பு வைத்தோன்'' என்று பாடினார். வானை - இது பொய் தீர்ந்த வான் என்று அடைமொழி கொடுத்து பொய்தீர் வான் என்பதிலிருந்து விஞ்ஞான உண்மை களை மணிவாசகர் எவ்வளவு கூர்மையாகக் கண் டெடுத்து முன்வைக்கிறார் என்பதறிந்து வியக்காமல் இருக்க முடியவில்லை.

இது தொடங்கி ஐந்து பூதங்களின் தொழிலை யும் கூறுகிறார் மணிவாசகர். ஐந்து பூதங்களின் தொழில்களும் தன்மைகளும் ஆவன:

| ஐம்பூதம் | தொழில் | தன்மை |
|---|---|---|
| ஆகாயம் | எல்லாவற்றிற்கும் இடம் தந்து நிற்றல் | ஓசை |
| காற்று | திரிந்து சலித்தல் | ஓசை; ஊறு (பரிசம்) |
| தீ | சுட்டு ஒன்றுவித்தல் | ஓசை, ஊறு, ஒளி |
| நீர் | நெகிழச் செய்தல் | ஓசை, ஊறு, ஒளி, சுவை |
| மண் | தாங்குதல் | ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம். |

மேற்கூறிய ஒவ்வொரு பூதத்திற்கும் அத னதன் தொழிலை நியதியாகச் செய்யும் வண்ணம் அவ்வவற்றிற்கு ஆதாரமாய் இருப்பவன் இறைவன் என்றார் மணிவாசகர்.

*(அடுத்த இதழில் நிறைவுபெறும்).*

★ ★ ★

### செல்வம் ஏன் ஈட்டவேண்டும்?

உழைப்பால் செல்வம் ஈட்டாத மகனைத் தாயும் விரும்பமாட்டாள். தந்தை அம்மகனை ஏன்பெற்றோம் என வேதனைப்படுவான். உடன் பிறந்தவர்கள் மதிக்கமாட்டார்கள். மனைவியும் இல்லற சுகம் தர மறுத்திடுவாள். மகனோ எதிர்த்துப் பேசுவான். நண்பரும் இல்லை ஆவர்.

ஆகவே ஒவ்வொருவரும் தன்மானத்தோடு வாழ நன்கு உழைத்து செல்வம் ஈட்டுதல் அவசியமாகும்.

### மூவுலகையும் வெற்றிகொள்ளத்தக்க தீரன் யார்?

கொடிய அம்புபோன்ற பெண்களின் கடைக்கண் பார்வையை வென்றவன் எவனோ?
விடம் போன்ற கோபத்தீயினில் குளிக்காது பொறுமை காப்பவன் எவனோ?
ஆசை மிகுந்த இவ்வுலகத்தில் எளிமையாய் பாசமும் பற்றும் அறுத்து வாழ்பவன் எவனோ?
அவனே மூவுலகும் வெல்லும் தீரன் ஆவான்.

### தெய்வத்துணை இல்லாதவர்க்குத் துன்பம் தொடர்ந்து வருமா?

நிச்சயம் வரும்.

மொட்டைத் தலையன் ஒருவன் வெயிலில் தவித்து நிழலுக்காக ஒரு பனைமரத்தின் அடியில் நின்றான். அப்பொழுது அந்த நெட்டைப் பனைமரத்தின் பனம்பழம் ஒன்று நேரே அவன் தலையில் வந்து விழுந்தது.

இதைப்போல தெய்வத்துணை இல்லாதவர்களுக்குத் துன்பம் தொடரும். தெய்வத்துணை தலைக்கு வருவதைத் தலைப்பாகையுடன் காத்து விடும்.

# திருஞானசம்பந்தரும், அருணகிரியாரும்

— திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட நாயன் மார்களுள் சிறப்பாகப்போற்றப்படும் நால்வர்களான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் போன் றோர்கள் பரம்பொருளையடைய பின்பற்றிய வழி களான, புத்திரமார்க்கம், தாஸமார்க்கம், சகமார்க்கம், சீடமார்க்கம் மூலமாக வாழ்ந்துகாட்டிய 4 வகை மார்க்கத்தினையும் ஒருங்கே அனுட்டித்தவர் அருண கிரிநாதர்.

பிள்ளையைப்போல் அன்பு செலுத்தியும், தாசனைப்போல் ஊழியஞ்செய்தும், நண்பனைப் போல் நட்புப் பாராட்டியும், சீடனைப் போல் உபதேசம் பெற்று அன்புடன் பராவியும், முருகனிடம் பக்திபூண்டவர் அருணகிரிநாதர்.

புத்திரமார்க்கத்தின் அடிப்படையில் ஞான சம்பந்தரையும், அருணகிரியாரையும் ஒப்பிட்டு, அவர்களின் பாடல்களிலிருந்தே இங்கு ஆராய்வோம்.

ஞானசம்பந்தரது பாடல்களுக்கு பண் வகுக்கப்பட்டது போன்று அருணகிரியாரின் திருப் புகழ் பாடல்களுக்கு சந்தம் வகுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பெருமான், அம்மையையும் அப் பனையும் முதற்கண் சீர்காழிகுளக்கரையில் கண்டு, ஞானப்பால் உண்டு, திருக்கடைக்காப்பு பாடியது போன்றே அருணகிரியாரும் திருவண்ணாமலை கோபுரத்தினின்றும் வீழ்ந்தவுடனே முருகனால் தாங்கிக்கொள்ளப்பட்டு, அவரை நேரில் தரிசித்த பிறகே, அவனருளால் திருப்புகழ் போன்ற கவிகளை பாடத்துவங்கினார் என்பதில் உள்ள ஒற்றுமை நயத்தை அறியமுடிகிறது.

ஞானப்பால் உண்டஞானசம்பந்தர், முதன் முதலாக, **''தோடுடைய செவியன் விடையேறி யோர் தூவெண்மதிசூடி''** என பாடியதிலிருந்தே, இடப்பாகத்திலிருக்கும் உமாதேவியை முதலில் குறித்து பாடியதுபோன்று,

அருணகிரியாரும், முருகனால் தடுத்தாட் கொள்ளப் பட்டபோது, முதன்முதலில், **''முத்தைத்தருபத்தித்திருநகை அத்திக்கிறை''** என்று பாடி இடப்பாகத்தில் வீற்றிருக்கும் தேவசேனை அம்மையாரை புகழ்ந்து பாடினார். அருணகிரியாருக்குச் சம்பந்தப் பெருமா னிடத்தில் உள்ள அன்புப் பெருக்கினைத் திருப் புகழிலும், கந்தர் அந்தாதியிலும் பார்க்கக்காணலாம்.

சம்பந்தர் இறைவனையும் இறைவியையும் அம்மை அப்பனாகக் கருதி புத்திர பாவத்தைக் காட்டியது போன்று அருணகிரியாரும், முருகரை **''எந்தாயும் எனக்கருள் தந்தையும்நீ''** எனக் கந்த ரனுபூதிப் பாடலிலும், **''அருணகிரிநாத எனும் அப்பனே போற்றி''** என திருப்புகழிலும், **''அமுத மதையருளி எமையாளும் எந்தை''**, எனவும், **''சதாசிவக்கடவுள் எந்தையர்''** - என்பதாகவும் திருப்புகழில் பாடியுள்ளார்.

ஞானசம்பந்தர், **கோளறு பதிகம்பாடி**, தாக்கில் ஞானசம்பந்தர் எனப் புகழப்பட்டதற் கேற்ப, அருணகிரியாரும், கோளறுப்பதிகத்திற்கு இணையாக **''நாளென்செயும், வினைதானென் செயும், எனைநாடி வந்தகோள் என்செயும் கொடுங் கூற்று என் செயும்''** எனக் கந்தரலங்காரத்தின் முற் பகுதியிலும், **''சேயவன்புந்திவனவாசமாதொடு சேந்த செந்தில்சேய்''** - என்று தொடங்கும் கந்த ரந்தாதிப்பாடலிலும் பாடியுள்ளதுகவனிக்கத்தக்கது.

ஞானசம்பந்தர், புத்திரமார்க்கத்தையன்றி, கிரியாமார்க்கத்திலும் வாழ, தலங்கள்தோறும் சென்று இறைவனை தரிசித்துப் பிறகு **திருக்கடைக் காப்பு** அருளிச்செய்தது போன்று,

அருணகிரியாரும், ''ஆடும்பரி, வேல், அணி சேவல் எனப்பாடும்பணியே, பணியா-யருள்வாய்'' என கந்தர் அனுபூதியில் பாடியதிலிருந்து, இவரும் முருகனது தலங்களுக்கெல்லாம் சென்றுபாடும் பணியை மேற்கொண்டார் என்பது அறியப்படுகிறது. சம்பந்தர், **''பிடியதனுருவுமை கொளமிகுகரியது''** எனும்பாடலை, நெட்டெழுத்துவராமலேயே பாடி யதற்கேற்ப, அருணகிரியாரும், **''அமிர்தகவிதொடை பாட அடிமைத்தனக்கருள்வாயே''** என சம்பந் தரைப்போற்றிசெய்து, ''கைத்தலநிறைகனி'' எனும் பாடலிலும், தாம் அவதரித்த தலமான திரு

வண்ணாமலை தலப்பாடல், ''**குமரகுருபரகுணதர நிசிசர**'' எனத் தொடங்கும் பாடலிலும் நெட்டெழுத்து வராமலேயே பாடியுள்ளதன் ஒற்றுமை நயத்தை காணலாம்.

சம்பந்தர், திருக்கோலக்காவில் இறைவனால் பொற்றாளம் பெற்றதுபோல், அருணகிரியாரும், திருவாவினன்குடியில், முருகனால் ஜபமாலை பெற்றதை, ''**ஜபமாலை தந்த சற்குருநாதா திருவாவினன்குடிப்-பெருமாளே**'' என ''**அபகாரநிந்தை**'' எனும் திருப்புகழ்ப் பாடலில் பாடியுள்ளார்.

சம்பந்தர், 16000 பாடல்கள் பாடியதற்கேற்ப, அருணகிரியாரும் 16000 திருப்புகழ்ப் பாக்கள் பாடியருளினார்.

திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டபோது, இறைவனால் சம்பந்தருக்குப் படிக்காக தந்தருளியது போன்று அருணகிரியாருக்கும், சென்னிமலையில் முருகன் படிக்காசு தந்தருளினார் என, ''**சென்னிமலை ஆண்டவன் காதல்**'' என்ற நூலில் பாடியுள்ளதை நினைவில் கொள்ள வேண்டும். ஒருவேளை, அருணகிரியாரால் பாடப் பெற்ற பாடல்களில் இதைக் குறித்துப் பாடி இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இன்றைய நாளில் அடியார் பெருமக்களுக்கு கிடைத்துள்ள, 1340 பாடல்களும் அமரர். வ.த.சுப்ரமணியப் பிள்ளையின் அயரா உழைப்பினால்தான் கிடைத்துள்ளது என்பதை கூறிக்கொள்வதில் பெருமிதமடையலாம்.

சம்பந்தர் அருளிச்செய்த க்ஷேத்திரக் கோவையில், ''**ஆரூர்தில்லையம்பலம்**'' எனத் தொடங்கி பாடியதுபோன்று, அருணகிரியாரும் க்ஷேத்திரக் கோவையாக பாடினபாடலில் ''**கும்பகோணமோடாரூர் சிதம்பரம்**'' என ஆரூரையும், தில்லையையும் முதற்கண் குறித்து பாடியுள்ளது கவனிக்கற்பாலது.

ஞானசம்பந்தர், சிவன் அருளால், சமணர்களால் இழைக்கப்பட்ட பல துன்பங்களினின்றும் வென்று, பாண்டியனின் இருகூன்நிமிர்த்தி, திருநீறிட்டு வெப்புநோயை தணித்தருளி, சமணர் தாங்கள் சபதம் செய்த வாக்கின்படி கழுவேறச் செய்தார். இதனால் சைவசமயம் தழைக்க மூலபுருஷராக விளங்கினார். அருணகிரியாரும், சமண மதத்தை தழுவிய பிரபுடதேவராஜனையும் அதற்கு உதவியாக இருந்த சம்பந்தாண்டான் என்பவனையும் வாதில் வென்று, முருகப்பெருமானை, திருவண்ணாமலையில் கம்பத்திளையராக எல்லோர் முன்னிலையிலும் வரச்செய்து காண்பித்தார். மேலும், இந்த ஜோதியைக் கண்ட அரசனது கண்களை பார்வையிழந்தபோது, சமணர்கள், தேவலோகத்தில் உள்ள பாரிஜாதமலரை அருணகிரியார் கொண்டுவர அரசரிடம் விண்ணப்பித்ததன் பேரில், கிளி உருவம் பெற்று, இந்திரலோகத்தில் இருந்து பாரிஜாதமலரை கொண்டுவந்து, அரசனும் பார்வைபெறஉதவினார். இதனால் அரசரும் சைவ சமயத்தில் சேர்ந்து, சமணர்களை வெறுத்து, அருணகிரியாரை குருவாகவும் ஏற்றார். அதனால் அருணகிரியாரும் சம்பந்தரைப் போல் இறைவன் அருளைப் பெற்றதோடன்றி, சைவ சமயத்தை வளர்த்தவராவார்.

சிறுத்தொண்டர் பொருட்டு, அவர் பெயரையும், அவர் ஆற்றிய திருப்பணியையும் குறித்து, ஞானசம்பந்தர் தமது பாடலில்

''**செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணி செய்ய**
**வெங்காட்டுள் அனல்ஏந்தி விளையாடும் பெருமானே**''

என்று பாடியுள்ளது போன்று,

அருணகிரியாரும், வீரையில் வீற்றிருக்கும் பழநிநாதரையும் பழநிமுருகனின் பரமபக்தரான கலிசை சேவகனார் அன்பையும் குறித்து, ''**கோலமதி வதனம்**'' எனம் பாடலின் ஈற்றடியிலும்'', ''**சீயுதிர மெங்கும்**'' எனும் பாடலின் ஈற்றடியிலும் ''சீறலசடன்வினைகாரன்'' எனும் பாடலிலும் பாடியுள்ளார்.

திருஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்றது போல், அருணகிரியாரும் வில்லிபுத்தூராரை, சுந்தரந்தாதிப் பாடலாகிய ''**திதத்தத்தத் திதிதாதை**'' எனத் துவங்கும், தகரவர்க்கத்திலே பாடி, வாதில் வென்றவராவார்.

மேலும் விரிக்கின், கட்டுரை நீளும் எனக் கருதியே இத்துடன் நிறைவு செய்யப்படுகிறது.

★★★

**தலயாத்திரை செய்திடுக**

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

- **தாயுமானவர்**

# சிவப்பிரகாசர் கவிநயம்

— நடராசன் அடிமை

அமிழ்தினுமினிய செந்தமிழ் விளங்கும் நம் நாட்டில் தமது கவித்திறத்தினால் அன்னைத்தமிழுக்கு அலங்காரம் செய்து தானும் இன்புற்றுப் பிறரையும் இன்புறச்செய்த சான்றோர்களில் துறைமங்கலம் சிவப் பிரகாசசுவாமிகள் என்ற பெரியவர் மிகப்புகழ் வாய்ந்தவர். திருவண்ணாமலையை ஒருமுறை சுற்றி வருவதற்குள் ''சோணாசைலமலை'' என்ற நூறுபாடல் களைப் பாடியருளியதாகவும் அந்தவரலாறு கேட்டு மகிழ்ச்சியடைந்த கலியுகக்கம்பர் என அழைக்கப் பெற்ற மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருச்சியில் ஓடத்தில் ஏறி அக்கரை சென்று திரும்புவதற்குள் (அக்காலத்தில் திருச்சி யில் காவிரியைக் கடக்கப்பாலம் கிடையாது) திரு வானைக்கா அகிலாண்டநாயகியம்மன்மீது ஒருமாலை பாடியதாகவும் வரலாறு. சிவப்பிரகாச சுவாமிகளின் கற்பனை நிறைந்த சில கவிதைகளைக் கண்டு இன்புறுவோம்.

''நான் கொடியவன். அன்பில்லாதவன் என மணிவாசகர் முதலான பெரியோர்கள் கூறுவது உப சாரவழக்கு. அடியேன் உண்மையாகவே அன்பில்லாத வன். என்னை ஏற்றருள்க'' எனப்பாடுகிறார்.

அருங்கவி வாதவூரனே முதலோர்
அன்பிலேம் என்றது வேண்டி
இரங்குதல் பொய்ம்மை: அன்பிலேன் எனயான்
இயம்பலே மெய் எனக்கருள்வாய்.

**- சோண சைலமாலை - 6**

''வெண்ணீறு, உருத்திராக்கம் முதலான புனைந்துவாழும் உன் மெய்யடியார்க்கு அடியேன் உதவி வறுமையும் உடல்இளைக்கும்பேறும் பெற்று வாழ அருள்வாய்'' என இளையான் குடிமாற நாயனார், குங்கிலியக்கலையநாயனார் போன்ற வர்களை நினைத் துப்பாடுவார் சிவப்பிரகாசர்.

வெண்திருநீறுபுனையும் மாதவர்க்கு
விருந்துசெய்துஉறு பெறுமிடியும்
கொண்ட நல்விரதத்திளைக்கும் யாக்கையும்
கொடியனேற் கருளும் நாள் உளதோ.

**சோணசைலமாலை 20**

ஞானசம்பந்தருக்குப் **பாலை** அளித்தும், அப்பர் பெருமானுக்குச் **சூலைநோயளித்தும்,** சுந்தரருக்கு ஓலை காட்டியும், மணிவாசகருக்குக் **காலை** (திரு வடி)க் காட்டியும் இறைவன் ஆட்கொண்டார் அல்லவா? **எனக்குப்பால் கொடுக்காவிட்டால் சூலைநோய் அளித்தாவது உன்பெருமை** பாடச் செய்யக் கூடாதா? எனக்கேட்கிறார்.

யாவுமாம் உண்ணாமுலை முலைப்பால்
ஈந்து பாடச் செய்யாயெனினும்
மேவுமாதுயர்செய் சூலைநோயெனினும்
விடுத்து நிற்பாடுமாறு அருளாய்.

**- சோணசைலமாலை-32.**

உலகில் பிறவாமை வேண்டுவோர் வேண்டுக. தினம்தினம் உனக்குச் செந்தமிழில் பாமாலைகள் பாடிப்புனையும் பேறுபெற எனக்குப்பிறவியருள்வாய் என வேண்டுகிறார்.

விரைவிடையிவரும் நினைப்பிறவாமை
வேண்டுநர் வேண்டுக: மதுரம்
பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக்கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்.

**- சோணசைலமாலை - 39.**

தமிழ்ப்பாவினங்களில் பாடும்போது உதடு ஒட்டாதுஅமையும் பாடல்கள் உண்டு. அதை நிரோட் டகம் என்பர். இதழ் அகல்அந்தாதி என்பர். சிவப் பிரகாசசுவாமிகள் திருச்செந்தூர் முருகப்பெருமான்மீது திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி என்று முப்பது பாடல்கள் பாடியருளியுள்ளார்.

யானைக்கண்டங்கரிசென்றேத்தெழிற்
செந்திலின்றடைந்தே
யானைக்கண்டங்கரியற்கங்கயிலையையேத்த தகை
யானைக்கண்டங்கரிசேரெண்டிக்காக்கினற் கீநலிசை
யானைக்கண்டங்கரிதாகிய சீர்க்கதியெய்தினனே.

### பொருள்

**யானைக்கண்தங்கு அரிசென்று ஏத்து ஏழிற் செந்தில் இன்றுஅடைந்து** - வெள்ளை யானைமேல் இருக்கின்ற இந்திரன் போய்த்துதிக்கின்ற அழகினை யுடைய திருச்செந்தூரை இன்றைக்குச்சேர்ந்து **யான்** = நான் **ஐக்கண்டம் கரியற்கு** அழகையுடைய கழுத்து கரியதாகவுள்ளவரும் **அங்கையிலையையேத்த தகை ஆன்ஐக்கு** = அழகிய கயிலாயமலையைப் போன்ற பெருமையையுடைய இடபத்தை வாகன

மாகக்கொண்ட கடவுளும் **அண்டங்கரிசேர் எண்டிக்கு ஆக்கினற்கு** = அட்டதிக்குகளையும் படைத்தவரான பரமசிவனுக்கு **ஈநல் இசையானைக்கண்டு** பிரணவப்பொருளை உபதேசித்தகீர்த்தியையுடைய முருகப்பெருமானைதரிசித்து **அங்கு அரிதாகிய சீர்க்கதியெய்தினனே** = அரிதாகிய முக்திபெற்றேன்.

கடினமான இந்நூல் 30 பாடல்களுடன் கூடியது.

★ ★ ★

கடுந்தமிழ் நூல்பாடிய இப்பெரியார் எளிய தமிழில் கண்ணப்பநாயனாருடைய வரலாற்றைப் பாடியுள்ளார். திண்ணனார் (பின்னால் கண்ணப்பராக மாறக்கூடியவர்) எளியமுறையிலேயே ''இந்தக் காட்டிலே உனக்கு புலால் உணவு யார் கொடுப்பார்?'' என இரங்கிக் கேட்பதுடன் **ஊனுணவு உனக்கு யாவர் உண்கெனத் தருவார்** என ''சாமி! நீ இங்கு தனியாயிருக்கவேண்டாம். என்னுடன் என்ஊராகிய உடுப்பூர் வந்துவிடு! நீ இரக்கப்படமாட்டாயா? எனக் கெஞ்சுவது மனத்தை உருக்குகிறது. சிவபெருமான் பதில்கூறவில்லை. அதுகண்டதிண்ணனார். ''உன் திருவுள்ளம் இங்கேயே இருக்கவேண்டும் என்று உள்ளதுபோலும்! அப்படியானால் நான் இங்கேயே இருந்துவிடுகிறேன்'' என நினைக்கும் அழகு அவரது தெய்வீகமான களங்கமற்ற திருவுள்ளத்தைப் பிரதிபலிக்கின்றது. தனக்குப்பசிஎடுத்தபோது ''இறைவனுக்குப்பசிக்குமே' என்ற எண்ணம் அவரது ஆழ்ந்த பக்தியையும் குழந்தையுள்ளத்தையும் காட்டுகிறது. சிவப்பிரகாசரின் கவிதையும் கதைசொல்லும் பாங்கும் கற்கண்டுமலை! தமிழன்னை அருளிய அமுது. அன்பர்கள் திருக்காளத்திபுராணம் முழுதும்படித்து இன்புற வேண்டுகிறேன். இப்பெரியோரது பிரபுலிங்கலீலை தமிழன்னையின் மிகப்பெரிய அணிகலன்களில் ஒன்றாகும்.

★ ★ ★

அப்பர், சுந்தரர், சம்பந்தர, மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும்பற்றி இவர் அருளிச்செய்துள்ள நால்வர்நான்மணிமாலை மிக அழகியது.

ஞானசம்பந்தப்பெருமான் அம்மையளித்த ஞானப்பாலைத் தனது நாவிலே தேக்கிக்கொண்டு அதனை தனது நாவினின்றும் அழகியதேவாரப் பாடலாக பாடியருளினார் எனக்கூறி சம்பந்தப் பெருமானது தேவாரம் ஞானமயமானது எனக்குறித் தருளுகிறார். அழகிய கருத்து

அப்பர் பெருமானின் தேவாரப்பதிகங்களில் மனத்தைப்பறிகொடுத்து, நாவுக்கரசர்பெருமானே! பிறந்தால் தங்களைப்போல் பிறக்கவேண்டும்! மக்களைப்பெற்றால் தங்களைப்போல் சிவானுபூதிச் செல்வரான மக்களைப் பெறவேண்டும் என்கிறார்.

செல்வமுள்ள நண்பனாகக் குபேரனைக் கொண்ட ஈசன் தங்களைப்போல் கல்வியறிவுமிக்க ஒரு நண்பன் வேண்டும் என்று, சுந்தரமூர்த்தி நாயனாரே! உங்களைத் திருமணவேளையில் தடுத்தாட்கொண்டதோடில்லாமல் உமக்காக பரவைநாச்சியார்பால் தூதுசென்றார். வீடுதோறும் சோற்றை இரந்துபெற்று அளித்தருளினார். என்னே உமது பெரும்பேறு என்கிறார்.

★ ★ ★

வேதம் சிறப்புடையதா? திருவாசகம் சிறப்புடையதா என்றால் வேதம் ஓதுவார் பொருளையறிந்துகண்ணீர்விடக்காணோம்! திருவாசகம் கண்ணீர் விடுமாறு மனத்தினை உருக்குகின்றது என்கிறார்.

செயற்கரிய செயல்கள் புரிந்த நாயன்மார்கள் இறைவனையடைந்தனர். ஆனால் இறைவனோ உமக்காகக் குதிரைச்சேவகனாகத் தோன்றியும், பிரம்படி பட்டும் அருளினாரே! என்னே! உமதுபெருமை என்றெல்லாம் புகழ்கிறார்.

★ ★ ★

அனைவரும் நல்வழிப்பட்டுவாழவேண்டும் எனவும் இறைவன் அருள்பெறவேண்டும் என்ற நல் உள்ளத்திலும் நன்னெறி என்ற நூலை அருளினார்.

கற்பனைக்களஞ்சியம் எனப்பெயர்பெற்ற இப்பெரியவர் அருளிய நூல் விவரம் பின் வருமாறு:

1. சோணசைலமாலை. 2. திருச்செந்தில் அந்தாதி. 3. திருவெங்கைக்கோவை. 4. திருவெங்கைக் கலம்பகம். 5. திருவெங்கையுலா 6. திருவெங்கை யலங்காரம். 7. சிவப்பிரகாசவிலாசம் 8. தர்க்க பரிபாஷை 9. நால்வர்நான்மணிமாலை 10. சதமணி மாலை 11. இட்டலிங்க அபிடேகமாலை 12. சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது 13. சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு. 14. சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ். 15. சிவஞான பாலையசுவாமிகள் கலம்பகம். 16. சிவஞானபாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி. 17. கூவப்புராணம் 18. பிரபுலிங்கலீலை. 19. வேதாந்த சூடாமணி. 20. சித்தாந்த சிகாமணி. 21. பழமலை அந்தாதி. 22. பிட்சாடன நவமணிமாலை. 23. பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை 24. பெரியநாயகியம்மை நெடுவிருத்தம் 25. ஏசு மதநிராகரணம். 26. நன்னெறி 27. சிவநாமமகிமை 28. தல வெண்பா 29. நெடுங்கழிநெடில் 30. குறுங்குழி நெடில் 31. நிரஞ்சனமாலை 32. கைத்தலமாலை 33. சீகாளத்திபுராணம் (இடைப்பகுதி)

இந்தமகாகவியின் நூல்களை சிவபெருமான் திருவருளால் தொடராக அனுபவிக்க அவனருள் வேண்டுவோமாக!

**திருச்சிற்றம்பலம்**

# தண்டிப்பதும் கருணையே

— டாக்டர் பழ. முத்தப்பன், எம்.ஏ.பிஎச்.டி.,
மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை மாவட்டம்.

இந்திய மெய்ப்பொருள் வரலாற்றில் சைவ சமயம் தனியொரு இடத்தைப் பெற்றதாகும். வெறும் வழிபாட்டை மட்டும் வற்புறுத்தாது வாழ்வியல் நெறிமுறைகளையும் அது வகுத்துத் தருவதால் உலகோர் சைவசமயத்தில் பற்றுக்கொள்கின்றனர். சைவ வாழ்வியல் நெறிமுறைகளை இலக்கியமாகத் தருவது சைவத்திருமுறைகள். இலக்கணமாகத் தருவது சைவ சித்தாந்தச் சாத்திரங்கள். எனவே திருமுறையும் - சாத்திரமும் சைவத்திற்கு இரு கண்களாகும்.

சைவசித்தாந்தம் கால்கொண்டது திருமந்திர காலத்திலேயாகும் என்றாலும் - அமைப்பு ஒன்றினைப் பெற்றது மெய்கண்டாரின் காலத்திலேதான் என்பது தத்துவ வாதிகளின் முடிபாகும். எனவேதான் தத்துவ நூல்களை மெய்கண்ட சாத்திரங்கள் எனக் கூறும் மரபு தோன்றியுள்ளது.

மெய்கண்டாரின் சிவஞானபோதம் அடிப்படை ஆதாரமாக விளங்க பின்னர் வழிநூலாக விளங்கியது அருணந்தி சிவாச்சாரியார் தந்த சிவஞான சித்தியாராகும். சிவஞான சித்தியார் இருபெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. முதற்பகுதி பரபக்கம். இரண்டாம்பகுதி சுபக்கம். பரபக்கம் விநாயகர் காப்புச் செய்யுள், பின் மங்கலவாழ்த்துப் பாடல்கள் 10, பின் சமயங்களின் கொள்கை, மறுப்புப் பாடல்கள் என அமைந்து மொத்தம் 301 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. சுபக்கம் மீண்டும் விநாயகர் காப்புப் பாடலைப் பெற்றுப், பின் பாயிரமாக 5 பாடல்கள் பெற்றுப், பின் அளவை இலக்கணம் பற்றிய 14 பாடல்கள் அமைந்து பின் பன்னிரண்டு சூத்திரப்பாடல்கள் அமைந்து மொத்தம் 328 பாடல்களைப் பெற்று விளங்குகிறது.

சிவஞான சித்தியார் முன் குறிப்பிட்டதற்கு இணங்கச் சைவ சமயக் கொள்கைளை வகுத்துக் காட்டுவதோடு - மனித சமுதாய வாழ்வியல் முறைகளையும் இடையிடையே வற்புறுத்திச் செல்கிறது. அதில் சுபக்கப் பகுதி முழுக்க முழுக்க தூய ஒழுக்க நெறியாக வாழ்வியல் அமையவேண்டும் என வாய்ப்புக் கிடைக்கும் இடந்தோறும் வற்புறுத்திச் செல்கின்றது.

''ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம்,
உபசாரம், உறவு, சீலம்,
வழுக்கு இலாத தவம், தானங்கள்,
வந்தித்தல், வணங்கல், வாய்மை,
அழுக்குஇலாத் துறவு, அடக்கம்,
அறிவொடு, அர்ச்சித்தல் ஆதி
இழுக்குஇலா அறங்க ளானால்,
இரங்குவான் பணி, அறங்கள்'' (பா.113)

என்ற பாடலை இங்கு நினைவு கொள்ளலாம். இப்பாட்டு 14 ஒழுக்க நெறிகளைக் கூறி - அவை அனைத்தும் இறைவனால் அருளப் பெற்ற அறக் கட்டளைகள் எனக்கூறி, அவற்றை மனித சமுதாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனக்கூறுகிறது.

நல்லொழுக்க நெறியில் வாழ்ந்தால் நன்மை விளைவதும், தீநெறியில் சென்றால் தீமை விளைவதும் இயல்பு. நன்மையால் வாழ்க்கையில் இன்பமும், தீமையால் வாழ்வில் துன்பமும் நிகழ்கின்றன. இத்தீமையைப் போக்க, நல்வழியில் செல்ல இறைவன் தண்டனையாகச் சில அனுபவங்களைத் தருகின்றான். இத்தண்டனை பற்றிச் சிவஞான சித்தியாரின் இரண்டாம் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணப் பகுதி சிறப்பாக விளக்குகின்றது.

மனித வாழ்வியலில் மானிடம் இம்மையில் செய்திடும் வினைகள்தான் மேல்வரும் இன்பதுன்பங்கட்குக் காரணம். இதனை,

''மேலைக்கு வித்துமாகி விளைந்தவை
உணவுமாகிஞாலத்து வருமாப்போல நாம்
செய்யும் வினைகள்'' (பா.102)

என்று உவமையால் விளக்குகிறது. அதாவது உலகத்தில் விளைந்த தானியங்கள் முதலில் உணவாகிறது. அத்தானியங்கள் விதையாகவும் சேகரித்து வைக்கப் பெற்று, அடுத்த விளைவிற்குக் காரணமாகவும் அமைகிறது. அதுபோலத்தான் மனித வினைகளாம் செயல்கள் இம்மையில் நன்மை தீமைகளைத் தந்து அதோடு அடுத்த பிறவிக்கும் காரணமாக அமைகிறது.

அவ்வாறு நன்மை தீமை அமைகின்றபோது அவற்றிற்குரிய பயனை மனிதர்கள் அனுபவிக்கச்

செய்வது இறைவனின் தொழிலாக அமைகிறது. அத்தொழில் அவனுடைய கருணையேயாகும்.

''இதம் அகிதங்கள் எல்லாம்
இறைவனே ஏற்றுக்கொண்டு இங்கு
இதம் அகிதத்தால் இன்பத்
துன்பங்கள் ஈவன் அன்றே'' (பா.103)

இன்ப துன்பத்தை இறைவன் தருகிறான் என்றால் இறைவன் அருளே வடிவானவன் ஆயிற்றே - அவன் கருணையால் இன்பம் விளையலாம். ஆனால் கருணையால் துன்பம் விளையலாமா என எண்ணத் தோன்றும். இவ் எண்ணத்திற்குத் தக்க விடை தருகிறார் சிவஞான சித்தியார் தந்த அருணந்தி சிவாச்சாரியார்.

குடும்பத்தில் குழந்தைகள் தவறு செய்கின்ற போது பெற்றோர்கள் அவர்களைக் கண்டித்திடுவர். அவர்கள் கண்டித்தல் பலவகையில் அமையும். கொடிய வார்த்தைகளால் திட்டிடுவர், அல்லது உணவு கொடுக்காது தண்டிப்பர். அல்லது சிறு குழந்தைகளாக இருப்பின் அவர்களைச் சிறுகோல் கொண்டு அடித்திடுவர். இத்தகைய தண்டனைகளை ஏற்கும்போது குழந்தைகட்குத் துன்பமாகத்தான் இருக்கும். ஆனால் அத்துன்பங்களை அனுபவிக்கும் குழந்தை, இனி அத்துன்பங்களை ஏற்கக்கூடாது என்று நினைத்துவிட்டால், தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்யாது விட்டுவிடும். எனவே தண்டனையைப் பெற்றுக் குற்றத்தை நீக்குவது - அல்லது தண்டனையை நினைத்துக் குற்றத்தைச் செய்யாமல் இருப்பது நிகழ்ந்துவிடுகிறது. எனவே தரப்பெற்ற தண்டனை நன்மையைத் தந்திருப்பது உண்மையாகிறது. இத்தகைய வாழ்க்கைநெறியை உவமையாக வைத்து - வாழ்வில் ஏற்படும் துன்பச் செயல்களுக்கும் இறைவனின் கருணைதான் காரணம் என்கிறார் அருணந்தியார்.

''தந்தைதாய், பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின், உறுக்கி
வளாரினால் அடித்து, தீய
பந்தமும் இடுவர்; எல்லாம்
பார்த்திடின், பரிவே ஆகும்;
இந்தநீர் முறைமை யன்றோ -
ஈசனார் முனிவும், என்றும்?'' (பா.1106)

புதல்வர்கள் குற்றம் செய்தால் பெற்றோர் அதட்டிச்சிறு கம்பினால் அடித்துத் தூணில் கட்டி வைப்பர். (தீயபந்தம் - கொடிய கைவிலங்கிடுவர்) பார்க்கும்போது இச்செயல்களின் துன்பம் செய்வது போலத் தோன்றிடினும் நல்வழிப்படுத்த வேண்டும் என்னும் கருத்துவகையால் அருளேயாகும். அது போலத்தான் இறைவன் தரும் தண்டமும் எக்காலத்தும் கருணையாம் என்பது இப்பாடலின் பொருளாகும்.

இப்பாடல் மூலம் வாழ்வியல் நெறி நன்கு புலப்படும். எவ்வாறெனில், வாழ்வில் துன்பம் ஏற்படுமானால், அத்துன்பத்திற்குக் காரணமாக ஏதோ தீய செயல் வாழ்வில் நிகழ்ந்திருக்கிறது என்பதை முதலில் உணரவேண்டும். பின் துன்பத்தை மகிழ்வோடு ஏற்று - அதாவது அத்துன்பம் இறைவன் தந்ததே என்பதால் மகிழ்வோடு ஏற்று, அத்துன்பத்திலிருந்து மீள இறைவனைத்தொழுது, மூல காரணமான தீயவற்றைச் செய்யாத, நல்வழியில் திருந்தி, வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற நெறி பெறப்படுகிறது. எனவே இன்பம் வரும்போது இறைவனைப் போற்றுவது போல - துன்பம் வரும்பொழுது அதுவும் இறைவன் கருணையே என நினைக்க வேண்டும். அவ்வாறு நினைத்தால் துன்பச் சுமை துன்பமாகத் தோன்றாது.

★ ★ ★

### தண்டிப்பது ஏன்?

பெற்றிடும் குரவர் ஆனோர்
பிள்ளைகள் தம்பால் நோயொன்(று)
உற்றிடில் பிறரைக் கொண்டும்
உறுதுயர் செய்து தீர்ப்பர்

மற்றவர் தம்பால் அன்போ
வன்கணோ அதுபோல் நம்பால்
பற்றிய பவங்கள் தீர்ப்பான்
பரமனும் இவற்றைச் செய்தான்.

- கந்தபுராணம்

# வினாவும் விடையும்

- சித்தாந்தரத்தினம் த. ஆறுமுகம்

**வினா :** திருஞான சம்பந்தருக்கு இறைவன் திருவீழி மிழலையில் வழங்கிய பொற்காசு வாசியுடன் கூடிய காசு எனவும், அக்காசு மாற்றுக் ''குறைந்த பொற்காசு எனவும் கூறப்படுகின்றதே! ஞானப் பால் உண்ட ஆளுடைய பிள்ளைக்கு இறைவன் மாற்றுக் குறைந்த காசு வழங்கியது என் மனத்தை வருத்துகின்றது. விளக்கம் தர வேண்டும்.

**விடை :** வாசியில்லாக் காசு - புதிய விளக்கம்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருப்பயணமாகத் திருவீழிமிழலை வந்து சேர்ந் தனர். அங்கே அடியார்களுடன் சில நாட்கள் தங்கி யிருந்தனர். அப்போது பெய்ய வேண்டிய மழை பொழியவில்லை. ஆதலால் ஆறுகளில் நீரோட்டம் இல்லை. மக்களுக்கு உணவு கிடைக்காததால் பெரும் பசி எங்கும் பரவிற்று. நாவரசும் ஞானசம்பந்தரும் தம் உடன் இருந்த அடியார்களுக்குக் கவலை நேருமோ என்று வருந்தினர்.

அப்போது இறைவன் அவ்விருவர் கன விலும் தோன்றி ''பசிநோய் உங்களை அடை யாது. எனினும் உங்கள் உடனிருக்கும் சிவனடி யார்களின் வாட்டம் நீக்குவதற்காக நாள்தோறும் ஒவ்வொரு காசு கோவிலின் கிழக்குப் பீடம், மேற்குப் பீடத்தில் அளிப்போம். இந்த பஞ்சகாலம் நீங்கினால் காசும் நின்றுவிடும்'' என்றார்.

மறுநாள் திருக்கோவிலை வலம் வந்த திருஞானசம்பந்தர் கிழக்குப் பீடத்தில் காசுகண்டார். தொழுது அதனை எடுத்து ''சிவனடியார் நாள்தோறும் விருந்துண்ண வருக'' என்று பறை அறைவித்தார். அதன்படி அடியார் உணவு பெற்று வந்தனர். இவ்வாறே நாவரசும் படிக்காசு பெற்றுத் தம் அடியார் களுக்குத் தம்மடத்தில் உணவு அளித்து வந்தார்.

திருநாவுக்கரசர் மடத்தில் உரிய காலத்தில் அடியார்களுக்கு உணவு கிடைத்துவந்தது. திருஞான சம்பந்தர் மடத்தில் உணவு படைக்கக் காலம் தாழ்ந் தது. அவர் சமையற்காரரை அழைத்துக் காரணம் கேட்டார். அவர்கள் ''எங்களுக்குச் சரியாகத் தெரிய வில்லை. உங்களுக்கு இறைவன் கொடுத்த காசுக்குக் கழிவுப்பணம் வாங்கி கொண்டு பண்டங்கள் கொடுத் திருக்கிறார்களாம். வாகீசர் பெற்ற காசுக்கு உடனே பண்டங்கள் கிடைத்து விடுகின்றன'' என்றனர்.

ஞானசம்பந்தர் சிந்தித்தார். ''ஒரு காசுக்குக் கழிவுப் பணம் கேட்கிறார்கள். மற்றொரு காசுக்குக் கழிவுப் பணம் கேட்பதில்லை என்றால் நாவரசர் உடல் தொண்டு செய்வதால் பெறும் காசு போலும். நாளை முதல் நான் பெறப் போகும் காசு, கழிவுக்கு உட்படாத காசாக இறைவனிடம் பாடிக்கேட்பேன்'' என்றார். அவ்வாறே மறுநாள் ''வாசி தீர்த்தருளும்'' என்று பாடி வேறு காசு பெற்றார். அந்தக் காசைக் கடைத் தெரு வில் ''இந்தக் காசு சால நன்று'' என்று ஏற்றுக்கொண்டு பண்டங்கள் உடனே கொடுத்தார்கள்.

இந்தச் செய்தி பெரியபுராணத்தில் திருநாவுக் கரசர் வரலாற்றிலும் வருகிறது.

இவ் வரலாறுகள் வழி அறியக்கிடப்பன:

1) இறைவன் அளித்த காசுகளில் ஏற்றத்தாழ்வு - வேறுபாடு இருந்தது. இறைவன் வேண்டுமென்றே இப்படிச் செய்திருக்கிறார்.

2) திருநாவுக்கரசருக்கு இந்தக் காசால் ஒரு குறைவும் இல்லை. குறைவு வரக்கூடாது என்று இறைவனே கருதியிருக்கிறார்.

3) ஞானசம்பந்தருக்குக் குறைவு நேர்ந்து விட்டது. அவர் காசு உடனே மாறவில்லை. அதனைக் கடைத்தெருவில் ஆய்வு செய்து ஏற்றுக்கொண்டதால் காலம் தாழ்ந்தது. அதனால் அடியார்களுக்கு உணவு கிடைப்பதில் காலம் தாழ்ந்தது.

4) இந்த ஏற்றத் தாழ்வுக்கு திருஞானசம்பந்தர், தாமே ஒரு காரணத்தை அமைத்துக் கொண்டார். அது, திருநாவுக்கரசு உரைத் தொண்டுடன் உடல் தொண்டும் செய்கிறார். தமது தொண்டு உரைத் தொண்டு மட்டு மே என்பது. பெரியபுராணத்தில் சேக்கிழார், இந்த வரலாற்றை எழுத அவருக்குக் கிடைத்த அகச்சான்று எது என்று பார்த்தால் ஞான சம்பந்தரின் அடியிற் கண்ட பாடலே,

''வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசில் மிழலையீர், ஏசல் இல்லையே''

இந்த நிகழ்ச்சி ஆராய்ச்சிக்கு உரியதாக, ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளத்தக்கதாக அமைந்திருக்கிறது.

வாசி என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் அகராதியில் உள்ளன. இந்த வரலாற்றுச் சூழ்நிலைக்கு ஏற்ப அச்சொல்லுக்குப் பொருந்தும் பொருட்கள்.

வாசி - அதிகம் - மிகுதி - (பெருமை)
வாசி - வேறுபாடு
வாசி - வட்டம்
வாசி - வட்டிக்கு மேல் அதிகமாகக் கழித்து எடுக்கும் கழிவுப்பணம்.

வாசி என்ற சொல்லுக்கு ''வட்டிக்கு மேல் அதிகமாகக் கழித்து எடுக்கும் கழிவுப் பணம்' என்ற பொருளைப் பொருத்தியே இந்த வரலாற்று நிகழ்ச்சிக்குப் பலராலும் விளக்கம் சொல்லப்பட்டு வருகிறது.

வாசி என்ற சொல்லுக்குச் சொற்பொருள் வேறுபாடு, அதிகம், வட்டம் என்பன. வட்டம் என்ற சொல்லுக்கு முழுமை என்ற பொருளும் வழங்குகிறது. இந்த நிலையில் வாசி என்ற சொல்லுக்கு வேறுபாடு, மிகுதி என்ற பொருட்களைப் பொருத்தி இந்த நிகழ்ச்சியை ஆராய்வதற்கு நல்ல வாய்ப்பும் பொருத்தமும் காணப்படுகின்றன.

திருமடத்தில் அமுது சமைப்பார் கூற்றாக வருவது: ''படிக்காசு கொண்டு சென்றால் வாசி பட வேண்டும் என்பார்'' என்பது. இதற்கு ''வேறுபாடு நீங்க வேண்டும்'' என்று பொருள் கொள்ளலாம். அன்றாடம் பழக்கத்தில் இருந்த காசுக்கும் இறைவன் ஞானசம்பந்தர்க்குக் கொடுத்த காசுக்கும் வேறுபாடு தெரிகிறது. அது நீங்க வேண்டும் என்பது பொருள். திருஞானசம்பந்தர் சிந்தனையாக வருவது. ''ஒரு காசு வாசிபட மற்றக் காசு நன்றாக வாசிபடாது ஒழிவான்'' என்பது. இதற்குப் பொருள்: ''ஒரு காசு வேறுபடுகிறது. மற்றகாசு வேறுபடவுமில்லை. நன்றாகவும் இருக்கிறது'' என்பது. அடுத்து ''வாசி தீரப்பாடுவன்'' என்பதற்கும் ''வேறுபாடு நீங்கப்பாடுவன்'' என்று பொருள் கொள்வது பொருத்தமாக அமைகிறது.

இவற்றை வேறு வகையாக சிந்திப்போம். சிவபெருமான் உள்ளபடியே திருநாவுக்கரசரை உயர்த்தித் திருஞானசம்பந்தரைத் தாழ்த்த எண்ணம் கொண்டாரா? அல்லது நாவரசர் பெருமையை ஞானசம்பந்தர்க்கும் அவர் அடியார்களுக்கும் - நமக்கும் உணர்த்த கருதினாரா? அல்லது சேக்கிழார்க்கு இப்படி ஒரு விளக்கம் தருவது கருத்தா? இவை ஆராயத்தக்கன.

ஞானசம்பந்தர் சிவபெருமானுக்கு மகன் முறை என்பதும் வாகீசர் தொண்டர் முறை என்பதும் வழக்கில் உள்ளனவே. ஒரு தலைவர் தம் மகனை விடத் தம் தொண்டரைப் பெரிதும் போற்றுவார் என்பது அரிதாக நிகழ்வதொன்று. அதாவது மகனிடம் குறையிருந்தால் அல்லது மகனைவிடத் தொண்டர் திறம் மிகுந்திருந்தால் தொண்டரைப் பாராட்டலாம் என்பது. அப்படி ஞானசம்பந்தர் வரலாற்றில் குற்றம் குறைக்கு இடமில்லை, சம்பந்தர் சிறுவராக இருந்தபோதே இறைவன் இவருக்குப் பொன் தாளம் கொடுத்தார். பிறகு முத்துச் சிவிகை முத்துச் சின்னம் முத்துக்குடை கொடுத்தார். அதற்கும் பிறகு முத்துப்பந்தர் அளித்தார். இவையனைத்தும் அவர் கேளாமலே இறைவன் தந்தார். திருவீழிமிழலையில் மட்டும் மாற்றுக் குறைந்த காசு கொடுத்து அவரை வருந்த வைத்தார் என்று கருதுமாறு இல்லை.

மேலும் திருநாவுக்கரசரோ தம் வாழ்வில் எவ்வளவோ துன்பங்களுக்கு ஆட்பட்டவர், உணவு கிடைக்காமல் ஒருமுறை வருந்தியபோது இறைவனே கட்டுச்சோறு கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தார். அப்படிப்பட்ட எளிய நிலையில் இருந்தவரை இந்த வீழிமிழலை நிகழ்ச்சியினால் மட்டும் உயர்த்த தேவையில்லையே.

திருநாவுக்கரசர் கைத்தொண்டு செய்தார். அதைச் சிறப்பிக்க மாற்றுக் குறையாத காசு இறைவன் கொடுத்தார் என்று சொல்லுவதானால், திருஞானசம்பந்தர் கைத்தொண்டைப் போற்றாதவரா? திருநீலகண்டப் பதிகத்தில் ''கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றதும் நாமடியோம், செய்வினை வந்தெமை தீண்டப்பெறாதிருநீலகண்டம்'' என்று தம் அடியார்களுக்குக் கைவினையின் சிறப்பை அறிவுறுத்தி இருக்கிறாரே.

காசுகளில் வேறுபாடு எப்படி இருந்திருக்கக் கூடும்? ஒரு உய்த்துணர்வு, தொண்டராக இருந்த அரசுக்கு அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த ஒரு காசாகக் கொடுத்தார். சம்பந்தருக்கு, மகன் முறையானதால் புத்தம் புதுக்காசு ஒன்றைப் படைத்துக் கொடுக்க எண்ணியிருக்க வேண்டும். இறைவன் படைத்த புதுக்காசில் என்ன புதுமை? ஒரு பக்கம் இடபம் மறுபக்கம் சூலம் பொறித்திருக்கலாம். நாவரசர் பெற்ற காசில் அக்காலச் சோழ அரசன் பெயர்

ஒரு புறம், புலிச் சின்னம் மறுபுறம் பொறித் திருக்கலாம்.

காசு வேறுபாடு பற்றிய திருநாவுக்கரசர் வரலாற்றில் வரும் பாடல் இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வதாகும். அப்பாடல்,

''ஈசர் மிழலை இறையவர் பால் இமயப்
பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம் திருமா மகனார்
ஆதலினால்
காசு வாசியுடன் பெற்றார், கைத்தொண் டாகும்
படிமையினால்
வாசி இல்லாக்காசு பெற்றுவந்தார் வாகீசர்''.

இங்கே சேக்கிழார் ஞானசம்பந்தருக்கு பயன் படுத்திய அடைமொழித் தொடர்கள்

ஈசர் மிழலை இறையவர் பால்
இமயப்பாவை திருமுலைப் பால்
தேசம் உய்ய உண்டவர்
திருமா மகனார்

என்பதாம். இறைவன் மாற்றுக் குறைந்த காசு கொடுத் திருப்பாரானால் இந்த அடை மொழிகளுக்குப் பய னில்லாமற் போகும். வாசி என்ற சொல் லுக்கு மிகுதி, பெருமை என்று பொருள் கொண்டால் மட்டுமே இந்த அடைமொழிகளுக்குப் பொருத்தமிருக்கும்.

ஈசர் மிழலை இறையவர் பால் இமயப் பாவை திருமுலைப்பால் தேசம் உய்ய உண்டது குற்றமா? அல்லது இறைவனுக்கு திருமாமகனார் ஆனது குற்றமா? அவற்றிற்கு தண்டனையாக மாற்று குறைந்த காசு பெற்றாரா? இல்லையே!

திருநாவுக்கரசர் கைத்தொண்டாகும் படிமை யினால் வாசியில்லாக்காசு (வழக்கத்தில் புழக்கத் தில் இருந்த - புதுமையோ தனிப்பெருமையோ வேறு பாடோ இல்லாத காசு) பெற்றுவந்தார். ஞான சம்பந்தர் திருமகனாரானதால் மதிப்பில் மிகுந்த காசு பெற்றார் என்பதே இப்பாடலுக்குப் பொருத்தமான பொருள்.

சேக்கிழார் மாமகனார் என்று திருஞான சம்பந்தரை ஏன் குறிப்பிடவேண்டும்? எண்ணிப் பார்ப்போம், ஈசர்க்கு மகனார்பலர். பிள்ளையார், முருகன், சண்டீசர், வீரபத்திரர் முதலியோர், திருஞான சம்பந் தரை இவர்களினும் மேம்பட்டவராக சேக்கிழார் கருதியிருக்கிறார் போலும்! மாமகனார் என்றார்.

ஈசர்க்கு மகன் என்பது பெரியபுராணத்தில் பல இடங்களில் வருகின்றது.

| | | |
|---|---|---|
| இருவருக்கும் தெரிவரியார் | | |
| திருமகனார் | பாடல் | 996 |
| இறைவர் திருமைந்தர் | ,, | 540 |
| ஆறுசூடினார் திருமகனார் | ,, | 1074 |
| வானவர் நாயகனார் மகனார் | ,, | 314 |
| நஞ்சணிகண்டர்தம் திருமகனார் | ,, | 655 |
| செய்யமேனியர் திருமகனார் | ,, | 707 |
| அண்டர்பிரான் மகனார் | பாடல் | 236 } நாவரசர் புராணம். |
| புரமெரித்தார் மகனார் | ,, | 401 } நாவரசர் புராணம். |

இன்னும் பல தொடர்கள் விரிக்கப் பெருகும். இப்படிப்பட்ட தம் மகனார்க்கு இறைவன் தம் தொண்டரைக் காட்டிலும் மதிப்பு குறைந்த காசு தந்தார் என்பது பொருந்துமா? திருஞான சம்பந்தர் மாமக னார் ஆனதால் காசுவாசியுடன் - வேறுபாட்டுடன் - பெருமையுடன் பெற்றார். கைத்தொண்டாகும் படிமையினால் வாசியில்லாக்காசு - புழக்கத்தில் இருந்த காசு - வேறுபாடோ - தனிச்சிறப்போ இல்லாத காசு நாவரசர் பெற்றார் என்பதே நன்கு பொருந்துவது.

சோழப் பேரரசில் மாற்றுக் குறைந்த காசு மாற்றுக் குறையாத காசு என இருவகை காசுகள் புழக் கத்தில் இருந்தனவா என்பதும் சிந்திக்கத்தக்கது.

இங்கே இறைவன் நினைத்தது ஒன்று. நிகழ்ந்தது வேறொன்று. ஞானசம்பந்தராகிய தம் மகனாரை மகிழ்விக்க - சிறப்பிக்க செய்த செயல் வேறுவகையாகிவிட்டது. பொதுவாகக் கடைத் தெருவில் ஒரு புதுக்காசு புழக்கத்துக்கு வந்தால் உடனே ஏற்கமாட்டார்கள். தயங்குவார்கள். திருப்பித் திருப் பிப்பார்ப்பார்கள். அடுத்தவரிடம் காட்டுவார்கள். அவர்கள் ஆமாம் ''புதுக்காசு இது'' என்றால் வாங்கிக் கொள்வார்கள். அப்போதுகூட சிலர் ''பழைய காசு இருந்தால் கொடுத்துவிடுங்கள்'' என்பர், இவை எல்லாம் இன்றும் நாம் காணக்கூடியவை.

ஞானசம்பந்தர் பெற்ற காசு புதுமையாக இருந் ததால் அக்காசு அவரே படைத்துக்கொடுத்தாரோ என்று ஆவணவீதியில் தயக்கம் காட்ட வாய்ப்பிருந் தது. காரணம் ஞானசம்பந்தர் பல அற்புதங்கள் செய் தவர். இரசவாதத்தால் காசு செய்துவிட்டாரோ என்று வணிகர் ஐயம் கொள்வது இயல்பு தானே! எனவே இறைவன் கொடுத்த புதுக்காசு பலர் பார்வைக்குச் சென்று முடிவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் காலம் தாழ்ந்தது என்று கொள்ள இடமிருக்கிறது.

திருஞானசம்பந்தர் பெற்ற காசு உள்ளபடியே மாற்றுக் குறைந்திருந்தால் என்ன நேர்ந்திருக்க வேண்டும்? திருநாவுக்கரசருக்குக் கொடுத்த காசுக்கு எவ்வளவு பண்டங்கள் கிடைத்தனவோ அவற்றை விட குறைவாகவே பண்டங்கள் கிடைத்திருக்கும். அதனால் பல அடியார்களுக்கு உணவுகிடைக்காமல் போயிருக்கும். ஆனால் அப்படி வரலாறு சொல்லவில்லையே. பண்டங்கள் பெறுவதில் காலம் தாழ்ந்தது அவ்வளவே, புதுமையான காசு இதுவரை வெளிவராதகாசு என்பதால் அதைத் தமக்கே உரிமையாக்கிக்கொள்ள ஆவணவீதியில் போட்டியாலும் காலம் தாழலாம். மேற்கூறியவை உய்த்துணர்வு முறையால் பார்த்தவை. இனி அகச்சான்று பார்ப்போம். திருஞானசம்பந்தர் பாடியுள்ள பதிகத்தின் இரண்டாவது பாடல்:

**"இறைவ ராயினீர் மறைகொள் மிழலையீர்**
**கறைகொள் காசினை, முறைமை நல்குமே"**

கறை-மாசு, கருமைநிறம், பலர் கையாண்டதால் கறைபடிந்த காசு- கறைகொள்காசு. "புதிய காசுவேண்டா. அதனால் ஆவணவீதியில் காலம் தாழ்கிறது. எனவே கறைகொள் காசு கொடுங்கள். திருநாவுக்கரசருக்குக் கொடுத்த அதே முறையில் எனக்கும் கொடுங்கள்" என்று ஞானசம்பந்தர் கேட்டார் என்று கொள்ளும்படி இருக்கிறது. மற்றொரு அகச்சான்று : திருநாவுக்கரசர் வாய்மூர்பாடல்:

**"பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு**
**வாடிவாட்டம் தவிர்ப்பார் அவரைப் போல்**
**தேடிக் கொண்டு திருவாய் மூர்க்கே எனா**
**ஓடிப் போந்திங்கே ஒளித்தவாறென் கொலோ"**

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு" என்ற தொடர் தரும் செய்தி என்ன? பழங்காசினைப் பாடிப் பெறவேண்டிய நிலையாருக்கு? ஏன்?

திருஞானசம்பந்தரோ, திருநாவுக்கரசரோ, திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தபோது படிக்காசுவேண்டும் என்று இறைவனிடம் முறை யிட்டுப் பாடவில்லை, பாடாமலே இறைவன் காசு கொடுத்தார். திருநாவுக்கரசருக்குப் பழைய காசாகவே கொடுத்து விட்டதால் மேல்விளைவு ஒன்றுமில்லை. திருஞானசம்பந்தர் புதிய காசுபெற்று, அது மாறுவதில் ஆவணவீதியில், காலம் தாழ்ந்ததால், பழைய காசைப் பாடிப் பெற்றார். புதிய காசு பெற்றவர்," அது வேண்டாம் பழைய காசு கொடுங்கள்" என்று பாடிப் பெறுகிறாரே என்ற இரக்கக் குறிப்பும் இதில் தெரிகிறது.

முடிவாக, திருஞானசம்பந்தர் முதலில் பெற்ற காசு, புதியகாசு, புழக்கத்தில் இல்லாதகாசு இறைவன் படைத்துக் கொடுத்தகாசு மாற்றுக் குறைந்த காசல்ல என்பது பொருத்தமான விளக்கமாகும்.

★★★

## வாசகர் எண்ணங்கள்

"திருமால் 108 போற்றி"கள் திவ்வியபிரபந்தத்திலிருந்து தொகுக்கப்பட்டிருந்தது மிகவும் சிறப்பாக இருந்தது. ஆழ்வார்கள் அருளிய ஞானத்தமிழால் ஆண்டவனை நாளும் போற்றி வழிபடச் செய்துள்ள தமிழக அரசிற்கு என் பணிவார்ந்த வணக்கங்களையும், பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**- இரா. பார்த்தசாரதி,**
அமைந்தகரை, சென்னை.

மாணிக்கவாசகரிடம் இறைவர் "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று அருளிச் செய்த சிறப்பும், தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பைத் திருக்கோவையாரும், கம்பன் கவி அமுதும் பாங்குற விளக்கும் சிறப்பும் கம்பன் கவிநயமணி வே. தியாகராசன் அவர்கள் நயம்பட விளக்கியிருந்தார்கள். படித்து மகிழ்ந்தேன்.

**- திருமதி. இராஜலட்சுமி,**
தமிழாசிரியை,
தாம்பரம்.

சேக்கிழாரின் பெரிய புராணத்தால் தமிழ்த் திருநாட்டில் ஏற்பட்ட மகத்தான மறுமலர்ச்சியினை சைவச் செங்கதிர் முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள் திறம்பட எடுத்துக்காட்டியிருந்தார்கள். அவருடைய "சைவமும் பெரியபுராணமும்" தித்திக்கும் அமுதாக இனித்தது.


**- மு. குமரவடிவேலன்,**
திருநெல்வேலி.

திருக்கோயில் இதழ் 'நாளொரு வண்ணமும் பொழுதொரு வண்ணமுமாக" வளர்ந்து வருகின்றது. திருக்கோயில் இதழில் வெளிவரும் கட்டுரைகள் ஒவ்வொன்றும் அருமை.

**- இரா. பழனி, திருத்தணி.**




திருவருணை அருள்மிகு உண்ணாமுலை அம்மை



திருவருணை திருக்கோயில் திருத்தோற்றம்

வி

...பவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.

: கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,

...ரர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.